கலாநிலயம்

V1. NO.22 31 May 1928

JL
ooo2l1, N28 KN
N28 '1'22
189005

Reg. No. M. 2324.　　　　தனிப்பிரதி ரு.

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரு. 7 8 0
புற நாடு ... ... ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

20 NOV 1928

Vol 1.]　　　1928ளு மே மீ 31வ　　　[No 22.

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	தலையங்கம் (Leader)	421
2.	காந்திமதி (A Novel) T. N. சேஷாசலம் B. A., B. L.	423
3.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L.	426
4.	தமிழ்ப் பாடம்	428
5.	வெற்றியெனுங் குதர்க்கம் (Translation) K. இராஜகோபாலன்	431
6.	மலர்வனம் "மதுகரம்"	432
7.	இலக்கிய எற்ற ஆராய்ச்சி E. T. சொக்கம்மாள் B. A., L. T.	433
8.	சிறுபாடல்கள்	435
9.	கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A, B. L.	436
10.	வர்த்தமானம்	439

கலா நிலயம்.

இரவீந்திரநாதர் கலையின் பெருமையைக் காட்டியது.

18905

கவி ரவீந்திரநாதர், விஶ்வபாரதி என்னும் பத்திரிகையில் இலக்கியக் கலையின் தத்துவத்தைப் பற்றியோர் கட்டுரை, படிப்பவர் பரவசமாகும்படி எழுதியிருக்கின்றார். அது, இந்தமாதம் 21வ சுயராஜ்யா பத்திரிகையில் பெயர்த்தமைக்கப் பெற்றுளது. ஆங்கிலம் வல்லுநரனைவரும் கவியின் மொழியாலேயே அவ்விடயத்தைப் படித்துணர்ந்து கொள்ள வேண்டுமென்பது எமது விருப்பம். ஆங்கிலம் அறியாதார்க்கு உபயோகமாகும் பொருட்டு அக்கட்டுரையின் சில பாகங்களை இங்குமொழி பெயர்த்தெழுத எண்ணினோம். இதனை வாசிப்போர், நாம் முன் "கலாநிலயம், செய்யும் கருமமும் செயல் வகையும்" எனும் தலையங்கங்கள் எட்டினுள் விளக்க முயன்றனவற்றை இவ்வங்காளக் கவிவரர் தமக்கே உரிய செவ்விய சொற்களால் தெளிய வைத்துள மேன்மையைக் காண்பர்.

கலையின் கற்பனை.

கலையினது அழகு இத்தன்மைத் தென்று சொல்லால் வகுக்க இயலா தென்றும், அவ்வழகினது உணர்ச்சியால் உள்ளத்திலே கரை செய்ய அரியதொரு உவகை பெருக, இவ்வுவகைக்கிடனாய மனத்தினின்று ஐயம் மருட்கைஅச்சம் யாவையும் அகலுமென்றும், மற்றும் இத்தொடர்பினவாய சில நலங்களும் கவிகளால் விளையு மென்றும் நாம் ஒருவாறு செப்பியதை ரவீந்திரநாதர் முடிவாகக் காட்டுகின்றார்:—

> "யோகிகள் அறியாததாயும், இலக்கணச் சூத்திரத்திற் கெட்டாததாயும், நடைமுதல் காரியப் பயனலன்றி உள்ளாந்தோய்ந்த உணர்ச்சியினாலேயே விலைமதிக்க வேண்டியதாயும் எந்த வொன்று இருக்கின்றதோ, அதுவே காவியக்கலையில் விளக்கமாகின்றது. அழகுநூல் செய்தியும் அன்னதே. அனுபவரஸிகனான எவனும் கலையில் சிருஷ்டியாய பொருளைக் கொண்டு, "நீயேன் இங்கிருக்கின்றாய்? உன் தன்மை என்ன, வேலை என்ன", என்றெல்லாம் கேள்விகள் போட்டு அதனைக் குத்திக் கசக்க மாட்டான், "நீ இருக்கின்றபடி இருப்பதே எனக்குப் போதுமென," விளம்பி மகிழ்வானவன்.
>
> எல்லை அளவிற்குள் அடங்கியவைகளிற்றானே நாம் வரையறுத்து இலக்கணம் கூற இடமுளது. அளப்பதற்கடங்காது அகண்டமாய்ப் பற்றுவார் பற்ற முயலுந்தோறும் பிடி நழுவிச் சழன்றோடுமொரு பொருளை, அறிவாலன்று, உற உற நெருங்கிய உணர்வினாலேயே எய்துதல் இயலும். மனோவாக்கிற் கெட்டா அவ்வாதியந்த மறநின்ற பரம்பொருளை, மருளெலாம் துரத்திவரும் ஆனந்த நிலையிலேயே நாம் அடையக்கூடுமென உபநிடதங்கள் கூறுகின்றன. உள்ளோடியன்று அப்பெரும் பொருளை அடைய வேண்டுமெனும் தாகம் நமதான்மாவிற்கு உளது; தன்னையேதான் உணர்வதற்கும இத்தாகமே தக்கசாதனம். அன்பும் தியானமும் காட்சியும் எவ்வெவ் வகைத்தாகி அத்தாகத்தைத் தணிக்க வல்லவோ அவைதாம் காவியங்களிலும் மற்றுள கலைகளிலும் இடம் பெறுகின்றன."

கலையின் தகலம்.

கலையினது உணர்ச்சி வளரவளர, ஒருவனை அது தன்னினைவினின்று அகன்று பெருகி அகிலாண்ட கோடிகளோடு ஐக்கியமாகி விடும்படி செய்யுமென்று முன்னோரிடத்தில் காட்டினோம். அதனையே இரவீந்திரநாதர் தம் சுய அனுபவமாகப் பின்வருமாறு கூறுகின்றார்:—

> சுவர்களுக்குள் அடங்கியவோர்இடம் எனது காரியாலயமாக அமைந்துளது. எண்ணியும் அளந்தும் வாங்குவதும் விற்பதும் கொடுப்பதும் ஏற்பதும்

அவ்விடம். இதற்குப் புறத்தே அந்தா தாரகை திரண்டவப் பெருவெளி பிரிக்கப் படாதிருக்கின்றது. எல்லையற்ற வொன்றில் எனக்கிருக்கும் உவகை யுணர்ச்சியால் இப்பிரிவிலாப் பெருவெளியை அனுபவிக்கின்றேன். இந்த அகண்டப் பெருவெளி யாகாசம் உண்டுறங்கிக் கழிகின்ற உடலின் வாழ்க்கைக்கு வேண்டிய அளவிற்குமேல் விஞ்சிக் கிடக்கின்றது. யாக்கைக்கு இவ்வாகாய விசாலம் இன்றியமையாத தன்றென்பதற்கு மண்ணுளே துளைத்துறையும் புழுக்களே சாக்ஷியாம். இவ்வுலகிலே மனிதப்புழுக்களும் சில காணலாம். இவர்களுக்கு ஆகாசம் வேண்டுமென்ற அவசியமில்லை. குறைந்ததே ஆகாயம் என்னும் வறுமையெண்ணம் இவர்பால் தோன்றிடாது. ஏனெனில், சரீர வாழ்க்கை சம்பந்தமாய் அவசியமென்றவைகளுக்குள்ளேயே அகப்பட்டுழலும் சிறைச்சாலைக் கம்பிகளுக்கப்பால் தனது இறகைவிரித் தகல்தலின்றி வாழ இயலாத இயற்கையுடைய மனமானது அவர்களுக்குள்ளே கொலையுண்டு இறந்துகிடக்கின்றது.

நம்மவரில் பலர்க்கு நக்ஷத்திரத்தைப் பார்த்து நெடுநாளாயிருக்கும். ரவீந்திரநாதர் இயம்பிய இவ்விடயம் நமது நெஞ்சுதடவும் அருஞ்சொற்கள். காரியமே கருத்தாயிருக்கும் நங்கால மக்களுக்கு நக்கத்திரத்தைப் பார்க்க நேர மேது! மண்ணிலே கண்ணைப் புதைத்துழலும் இக்காலத்தில் அண்ணாந்து வானத்தை நோக்கி நாம் எத்தனை நாளாயிற்று. 'கடைசியாக விண்மீனொன்று உன் கண்ணில் பட்டநாள் எது' வென்று கேட்டுப் பாருங்கள். வரும் விடை நகை விளைக்கும்.

அலங்கார சாஸ்திரம்.

கலைஞர் தாம் சொல்லவரும் விடயத்தைப் பொருள் தெரிவதற்கு வேண்டிய அளவு வார்த்தைகளால் உரைப்பதோ டமையாமல் பலவிதமாய் அதனைப் புனைந்துரைப்ப தேனென ஒரு சமயம் இப்பத்திரிகையில் விளக்கியுள்ளோம். சிருஷ்டிப் பொருள்களின் புறத்தே காண்கின்ற வெளித்தோற்ற வேறுபாட்டைக் கடந்து அப்பாலிருக்கின்ற ஒற்றுமையின் உணர்ச்சியே காவியங்களில் அணிகளாய்க் காண்பதாகின்றது, என்பது நாம் கொண்ட கருத்து. ரவீந்திரநாதர் பின்னுமோர் தத்துவம் அணி இலக்கணத்தில் காட்டுகின்றார்:—

"சொல்திறத்தை வட மொழியில் அலங்கார சாஸ்திரம் என்றழைப்பர். முடிவொன்று பெற்றதென நினைக்கின்ற நிலையினுக்கும் அப்பாலிருப்பதைக் குறிக்கின்ற சின்னங்களே அணிகளாகும். தன் குழந்தையினிடத்தில் உற்ற உவகைக்கு அளவு இதன்மேல் இல்லையெனக் கண்ட தாய் ஒருத்தி, அதற்கு மப்பால் ஒன்று இருக்கின்றதெனும் தனதுள்ளத்தி னுணர்ச்சியை ஒருங்கே நகையென்றும் அணியென்றும் மாற்றி அக் குழந்தையின் மெய்யினை அலங்கரிக்கப் புகுகின்றாள். நமது வேலைக்காரர்களை நாம் எல்லைக்குள் அடக்கிக் கருதுகின்றோம். ஆதலால் அவன் செய்யும் வேலைக்கும் மாறாகக் கூலி அளந்து கொடுத்து விடுவதுடன் இருவர்க்கும் உள்ள தொடர்பு முடிந்து போகின்றது.

ஆனால் நமது அன்பிற்குரியவரைக் கருதுகின்ற கருத்தோ அலகிலாத் தன்மையது. அன்னவரைக் கண்டளவளாவி யழைக்குங்கால், நம் பாஷையும் நடையும் குரலும் சிறுமுறுவலும் அணி பெற்று அலர்கின்றன. காவியங்களில் நமதன்பிற்கும் உவகைக்கும் பாத்திரமாய பொருளைப் பற்றி அணிகொண்ட சொற்களால் பேசுகின்றோம் இவ்வார்த்தைகள் சிறப்படைவது அவைகளின் அர்த்தத்தினாலல்ல. அவைதமில் பொருந்தியவோர் உள்ளுணர்வினாலாம். அவ்வுணர்வின் வர்த்தமானம் இதுவேயென விலக்கரும் வகையில்தெரிவிப்பதும் அச்சொல்லிசைக்கும் நாதமே. தர்க்கத்தால் விளங்காத காட்சியும் நினைவும் கனவும் - காவியத்தின் உரிமை.

கலைகளும் யாக்கையும்.

எனக்கிதனால் என்னபயன் என்று வினவாது, அழகினை அதன் நிமித்தமே போற்றுதற்குப் பழக்கிவைக்கும் தன்மையால் கலையுணர்ச்சி சுயநய மறுத்துத் தூய நினைவும் நெறியும் அளிக்குமென்று முன்னர் யாம் காட்டிய கொள்கையை இக்கவிஞர் தக்க சொற்களால் விளக்குவார்:—

"தனது ஆராதனைக்கு ஏற்றதாய் அமைந்தவொன்றை அலங்காரம் செய்யும் பொருட்டு அணிகலன் தேடும் நம் மனம், மிகவும் நுணுகி ஆய்ந்து ஆய்ந்து தேர்ந்தெடுக்கின்றது. சஜின மலர் அழகிற் குறைந்ததன்று. எனினும் வேனிலான் கொலுவீற்றிருக்கும் வைபவத்தைப் புகழ்கின்ற புலவர்கள் யாரும் மறந்தேனும் அம்மலரைச் சேர்த்துப் பாடுவதில்லை. உணவுப் பொருளில் ஒன்றாய் உதவுகின்றபடியால் கவிகளின் கண்முன்னே அது கவுரவம் அழிந்து போயிற்று. கத்தரியும் சுரைப்பூவும் காவியத்தின் கடைவாயிலில் தலைசாய்ந்து நிற்பதற்கும் காரணம் இதுவேயாம். இவைகளும் மலர்களே யானபோதிலும் சமையலறைச் சம்பந்தத்தால் சாதிகெட்டுப் போயின. புலவர்மாத்திரமோ, அவர் கதைவரும் காதலிமார்களும் இப்பூக்களை வெறுக்கின்றனர். குண்ட மலரும் டாகர் மலரும் நிறத்திலேனும் மணத்திலேனும் சிறந்தனவல்ல. எனினும், வயிற்றுப் பசியைத் தீண்டிய மாசு அவை எய்தாதலால், அலங்காரவாயில் அவைகளுக்குத் திறந்திருக்கக் காண்கிறோம்.

எது எவ்வாறாயினும் ஆகுக. நமது உபயோகத்திற்கு உள்ளாயிருக்கின்ற எதனையும் நாம முழுதாய்க் காண்பதில்லை யென்பது சாதாரண அனுபவ பூர்வமாய்த் தெரிய வரலாகும். ஏனெனில், நமது அவசியமென்னும் இருள் கதுவி அவைகளுக்குக் கிரகணம் ஏற்படுகின்றது. கிரகஸ்தனுக்குச் சமையற்கட்டும் 'உக்கிராணமும்' தினசரி அவசியத்திற்கு இடமானவை. ஆனால் இவ்வறைகளைத்தான் அவன் பிறர் பார்க்காவண்ணம் வீட்டின் பின்புறம் கட்டுகின்றான். வந்தவரை அழைத்தேற்கும் முன்கூடமோ, இல்லாதிருந்தாலும் அவன் இறந்துபோகான். ஆயினும் கம்பளம் விரித்தும், சித்திரங்கள் வைத்தும் தன்னாலியன்றவளவு அலங்காரம் செய்ய முயல்வது வீட்டின் இப்பாகத்தையே. அயல்நாட்டு அழகுப் பொருள்களைக்கொண்டுவந்து வைத்து அங்கு ஓர் உலகசம்பந்தத்தைத் தனக்கு ஏற்படுத்துகின்றான்; ஏனெனில், அவசியத்தால் கட்டுண்ணாமல் தன்னிச்சையாய்த் தேர்ந்துகொண்ட இந்த முன்கட்டுக் கூடத்தின் மூலமாய்த் தன்னைத்தன் சுயரூப வைபவத்திலே பிறர் காணவேண்டுமென்பது அவன் விருப்பம். தின்பதும் தின்பண்டம் சேர்த்து வைப்பதும் ஆகிய இவ்விஷயங்களில் அவனது ஆன்மரூபம் முடிவாய சிறப்பும் குறியும் காண்பதில்லை. தனக்கு ஒரு விசேஷ கவுரவம் உளதென்னும் வதந்தியை வரவேற்கு மறையின் மூலமாய்த் தெரிவிக்க முயல்கின்றான்—ஆதலாற்றான் அது அலங்காரம் செய்யப்படுகின்றது."

உபநிடதங்கள் ஒரு விஷயத்தைச் செம்மையாய் அறிந்துணர்ந்து, அவை குறிக்கும் அருநிலை எய்துதற்கு மூன்று சாதனங்கள் கூறுகின்றன. அவை தாம் முறையே, சிரவணம் மனனம் பாவனை என்பனவாம். கலையின் மெய்த்திறங் கண்ட நம் கவி இரவீந்திரநாதர் உரைத்த மொழியை அம்மூன்றினாலும் பயின்று கொள்ள வேண்டியவராகின்றோம். இல்லையேல் அவர் காட்டிய அருமையை இதன் கண் காண இயலாது.

காந்திமதி என்னும்

காந்தாரநாட்டுக் கட்டழகி.

(404 வது பக்கத் தொடர்ச்சி)

19. நன்றியும் மறப்பது நன்று.

காந்தார நாட்டிற்குத் தென்திசை எல்லையில் சமைந்திருந்தது இரத்தினபுரி. அந்நகரின் தென்னெல்லையும் பெருங்குன்றத் தொடர்ச்சியே யாம். இப்பெருங்குன்றமெனும் குறிஞ்சிநில வைப்புக் கீழைச்சாரல் மேலைச்சாரல் என இருபெரும் பிரிவுகள் வாய்ந்தது. கீழைச்சாரலை வஜ்ரதர வகுப்பினரும் மேலைச்சாரலைக் காலமாருத வகுப்பினரும் வெகுகாலமாய் ஆண்டுவந்தனர். பெருங்குன்றமும் காந்தார நாட்டுச் சிம்மாதனம் வதிந்த மன்னனது ஆணைக்கு அடங்கியதே யெனினும் அன்னான் ஆற்றலில்லாத் தன்மையனாகும் காலங்களில்பெருங்குன்றத்தலைவர் இருவரும் அவனை மதித்தலின்றித் திறையும் செலுத்தாது இருந்துவிடுவர். மறுபடி காந்தாரத்திற் கதிபதியாய்ச் சேவகம் சான்ற வீரன் சக்கரம் நடத்துங்காலத்தில் அவ்விருவரும் தலைவணங்கிக் கப்பம் கட்டுவர். இத்தலைவர் ஆளும் மாக்கள் வேட்டுவ வகுப்பினர். வேட்டையாடியும் தேன் தோல் தந்தம் கவரி மான்மதம் பட்டுப்போன்ற மலைபடு பொருள்களைக் கொண்டு அயல்நாடுகளில் விற்றும் வாழும் வாழ்வினர். வணிகம் வாய்ப்பதற்கு வசதியில்லாச் சமயங்களில் அண்டை யயல் நகரங்களை இராக்கொள்ளை காணும் தொழிலும் அவர்கள் பொருளீட்டற்குப் பழகியதொழில்களில் ஒன்றாகும். இரத்தினபுரிக்கும் பெருங்குன்றக் கிழக்குச் சாரலிற்கும் இருந்த தூரம் கால் காதத்திற்குக் குறைந்த தாகையால் அவ்வேடர் இடும் கொள்ளைக்கு இந்நகரம் பலகால் இலக்காயது. நகரத்தினுள்ளே வசிக்கும் சில துரோகிகள் உடந்தையா யிருந்தாலன்றி அக்குன்றத்துக் குறவர் எளிதில் வந்து கொள்ளையடித்து இடையூறின்றி மீளுதல் இயலாதெனத் தெளிந்து, அது இயலாவண்ணம் ஊரார் எவரும் அவ்வேடருடன் எத்தகைய போக்குவரவும் வைத்தலாகாதென்னும் சட்டம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. மதச்சட்டத்தை இகழ்ந்ததோடமையாமல் இந்த ஊர்ச்சட்டத்திற்கும் விரோதமாகக் காந்திமதி தயாபரசுவாமிகளைக் காத்தல் பொருட்டுக் கந்தனை ஊர்க்குள் அழைத்தனள் என்பது கேட்கக் கருணாகரர், 'கெட்டது நம்குடி' என நடுங்கியதற்கும் காரணம் இதுவே. பெருங்குன்றத்தவரால் கொலையும் கொள்ளையும் இரவில் நேரிடுவது வழக்க மானதாற்றான் காந்தியும் முன் கலாநாதனைக் 'கொன்றதும்' பெருங்குன்றத்தவரென மதித்துப் பிழைத்தனள்.

சயிலத்தின் சாரல் இரண்டினையும் பிரித்தாண்டாரேனும் வஜ்ரதரத் தலைவனும் காலமாருதத் தலைவனும் நட்புடன் பொருந்திப் பகைவர்தமக்குத் தம்மிரு மார்பையும் ஒன்றாய்த் தந்தும் போர்கொண் டெழுங்கால் தம தோளினை இணைத்தும் மாறுவெற்றியுடன் பரம்பரைபரம்பரையாய் வாழ்ந்து வந்தனர். எனினும் கந்தன் பிறந்த காலத்தில் அவ்விருவருக்கும் பகையுண்டாகி மறுபோரில் இரியல்போன காலமாருதன் இவ்விருபது வருடங்களாய் வஜ்ரதரனைக் குலத்தோடும் தொலைப்பதற்கு ஆவனமுயற்சிகளைச் செய்துவந்து இக்காலம் இருதிறத்தோரும் யுத்த சன்னத்தராய் ஆரவாரத்துடன் அமைவதுமாயினர். ஒற்றுமையின் நன்மையை உணர்ந்த பிரதானிகள் பலர் இவ்விருமையோர் சினத்தைத் தணித்துச் சந்துபடச் செய்ய முயன்றனர். ஆனால் செய்தியத்தனையும் அன்றன்று ஒற்றர் மூலமாய் அறியும் விராடபத்ரன், பெருங்குன்றத்தவர் இரண்டுபடுவதே காந்தாரத்திற்குக் காப்பு எனத் துணிந்து நயவஞ்சகர் நால்வரையனுப்பித் தலைவர் இருவரும் சேராவண்ணம் செய்திட்டான். இரதி பௌர்ணமி தினம் சங்கர மண்டபத்தில் நடைபெற்ற மந்திராலோசனைச்சபையில் அவ்வன்னெஞ்சன் வகுத்த சூழ்ச்சிக்கு நலந்தீது பகுத்தறியும் பான்மையில்லா இவ்விரு தலைவரும் இசைந்தனர். வஜ்ரதரனும் காலமாருதனும் வருகிற விஜயதசமி யன்றைகான் தத்தமக்குத் துணையாய் மறவர் இருபத்தொன்பதின்மர் சூழவந்து, இரத்தின புரியில் விச்வகேசரி சக்ரவர்த்தி முன்னிலையில் கடும்போர் புரிந்து தம் பகைதீர்த்துக் கொள்வதெனச் சம்மதித்து அன்னதற்கு வேண்டிய முயற்சிகளை அதிதீவிரமாய்ச் செய்து வருவாராயினர்.

தனதுயி ரனைய புதல்வியைச் சந்திரசேகரரிடம் விட்டுச் சட்டத்திற் கஞ்சிக் கருணாகரர் தஞ்சமெனப் பெருங்குன்றம் வந்த சமயமும் இதுவே. அக்குன்றினில் வாழ்வோர் குணமெல்லாம் நன்றாயறிந்தவராகையால் வழிப்பயமில்லாமலே நடந்தார். நண்பகல் முழுவதும் நடந்து இளைத்துத் தங்குமிடம் காணாது தவிக்குந் தருணத்தில் சற்றுத் தூரத்தில் மரங்களுக் கிடையே சிறு குடிலொன்று அவருக்குத் தென்பட்டது. வனசரன் மூர்க்கனேனும் அவன் வீட்டிடம் அணுக அவர் அஞ்சவில்லை. அம்மலைவாழ் மாக்கள் அரைக்காசிற்காக முழு உயிரையும் எற்றிப் பறிப்பவரேனும் பசியென்று கூறித் தம் வாயிலடைந்து இரப்போர்க்கு இருக்கும் உண்டியை உதவித் தாம் பட்டினி கிடக்கும் வள்ளலர். ஈதறிந்த கருணாகரர் அக்குடிற்புறம் சென்று கதவைத் தட்டினர். கதவு திறந்தது. உள்ளிருந்து கவற்சியொடு அதிசயம் தோன்றிய முகத்தினனாய் வஜ்ரதரனது எல்லைக் காவலாளர்களுள் ஒருவன் பூதாரன் என்பான் வெளிவந்தனன். பண்டேயறிந்துளான் பூதாரன் கருணாகரரை. ஆதலால், அவரைக் கண்டவுடன் அவன் முகத்திலுற்ற அதிசயப் பார்வையும் கவற்சியின் குறிகளும் விரைவினில் மாறின. நோக்கக் குழைவது இவ்வுலகின்கண் விருந்து ஒன்றேயாதலால், தாம் வந்ததில் வியப்பேனும் வெறுப்பேனும் விளைந்துளதென விருந்தினர் கருதாவண்ணம் ஒழுகும் உத்தமர் பெருங்குன்றம் வாழ்பவராவர். ஆதலால் நகைமுகங் காட்டிப் பூதாரன் கருணாகரரை யுட்புறம் அழைத்துச் சென்று அவருக்கு உண்ணவும் பருகவும் வழங்கி அவர் இத்தூரம் வந்தவாறு என்னென வினவினன். அதற்குக் கருணாகரர், "பூதாரா, நும் வஜ்ரதரத் தலைவனைக் காணுமோர் விழைவினால் வந்துளேன். அவனை அடைவதற்கு ஒத்த சமயம் இதுவோ!" என்றனர்.

"ஐய, இக்குன்றம் முழுவதும் கரையரியதோர் துயரத்தில் ஆழ்ந்துளது. எந்தை உடல் நீங்கி வானுளச் சென்றுளான்," என இரங்கிய குரலால் எதிர் விளம்பினன் பூதாரன்.

"என்னவோ இஃது ஐய, வஜ்ரதரத்தலைவன் மாண்டனனோ பூதார, எனது உயிரோடோடிய உற்றதோர் நண்பன் தரைகடந்து மாய்ந்தானோ!" எனக் கருணாகரர் கலங்கித் திகைப்பப் பூதாரன், வன்மை சிறிதும் வருத்தம் சிறிதும் கலந்த குரலால், "கருணாகரரே, பொல்லாத வாய்ச்சொல் புகல்கின்றீர். அடியேங்கட்கு ஆதாரவாம் வஜ்ரதரத் தலைவன் எந்நாளும் மாளாதவன், கண்டீர்!" எனத் தகைந்தனன்.

மூரண்பட வுரைக்கும் இவ்வனசரனின் கருத்துணராமற் கருணாகரர், "மற்று!" என்று அவன் கண்களை எதிர் நோக்கினர்.

"ஆம், வஜ்ரதரத் தலைவன் எந்நாளும் மாய்ந்திடான். குறித்தநாள் கோலோச்சிக் குடிகாத்த அஞ்சனவர்மன் ஆவிநீத்து நாழியும் அறுபது ஆயிற்று. மன்னவன் மைந்தன் மகேந்திரன் இப்பொழுது எமக்கு வாய்த்த அருந்தவத் தலைவன் ஆவான்!" எனப் பூதாரன் விளக்கியுரைக்கவும் கருணாகரர், செத்தவனுக்கு இரங்கவேண்டுமென்னும் தன்மையையும் பாராமல், "பூதாரா, மகேந்திரன் என்றோ புகன்றாய்? எனின், கந்தன், கந்தன், என் கந்தன் இம்மலையா ளரசு? நான் நாழியொன்று இரண்டும் தாழாமல் அவனை — அவரைக் — காணல் வேண்டுமே" என்று ஆர்வமொடு செப்பினர்.

"இயலாது அது! தந்தைக்கியன்ற ஈமக்கடன்களை இக்காலம் ஆற்றிக்கொண்டிருப்பர். அவையெலாம் முடிந்ததும் விஜயதசமிப் போருக்குரிய கருமங்களைக் கருதவேண்டியவரா யிருக்கின்றார். தனதுயிரும் நாடும் மானமும் போற்றுதற் கிருக்குமவர் அயலாரோடு அளவளாவ நேர்வதற்கில்லை."

"பூதாரா, நீ வன்பொடு விலக்கினும் நான் எளிதில் மீளேன். நின் தலைவன்மாட்டு எனக்கு அரியதோர் காரியமுளது. அவனைப் பார்க்காது அமையேன்."

"ஏனையா, நங்குல நாயகனை நீர் நாடுதற்கு என்னிமித்தம்? யாசகமா?—வர்த்தகமா?—எதுவாயிருப்பினும் ஏற்ற அமயம் இதுவன்று."

"விலைஞனாய் வந்ததில்லை நான் இக்காலம். மற்றுப் பூதாரா, இரவலனும் யானல்லன். எம்மிருவருள் யாருக்கு யார் கடன்பட்டுள்ளார் என்பதையும் நீ அறிவையன்றோ!"

"ஆயின், ஐய, எக்கடன் இறுத்தேக வந்துளீர்! கொடுத்தது கடனானாலும் கேட்பதற்குக் காலமுண்டு. நிகரற்ற தந்தையைப் பறிகொடுத்து நெட்டுயிர்க்கும் வேளையோ கடன் காரர்க்குத் தக்கதாயது?"

"வாங்கினவன் வேளைதான் கருதுதற்கு முதன்மையாய் அமைந்ததோ, அப்பா, கடன் கொடுத்தவனது நிலையும் வேளையுங்கூடச் சிறிது நினைப்பதற் கொத்தவே!"

"ஐய, ஐய! இடையூறு ஒன்று நீர் உடையராயின் முன்னொன்று நீர் செய்ததைச் சுட்டியே பின்னோர் உதவிதான் அதற்கு மாறாக எம் வேந்தன்பால் கேட்க வேண்டும் என்ற விதியில்லை. உற்ற இடுக்கணைக் கூறுமின், மகேந்திர வள்ளல் பழங்கணக்குப் பாராமலே யதனைப் பற்றறப் போக்குவார்...என்னுடன் வருவீராயின் நும்மை யான் அவரிடம் சேர்க்கின்றேன்." என்று பூதாரன் கூறிச் சுவரில் மாட்டியிருந்த கேடகத்தையும் வாளையும் எடுத்துத் தரித்துக்கொண்டு நெடுவே லொன்றுங் கையிலேந்திப் புறப்பட்டான். கருணாகரரும் எழுந்தவனைப் பின்தொடர்ந்தார்.

சிறிது தூரம் செல்லும்வரை இருவரும் உரையொன்றும் பேச முயன்றிலர். பின், கருணாகரர், "பூதாரா, நுங்குரிசில் எங்குளர். எத்தூரம் உளது?" என்று வினவினர்.

"இறந்தோரைச் சுடலைக்கும் இருப்போரை அடுபோர்க்கும் உய்ப்பவராய்க் காவதம் ஒன்றிற்கப்பால் பொருந்தியுளர்," என அவ்வேடன் பதிலுரைத்தனன்.

வஜ்ரதார் போர் செய்வதென்றால் காலமாருதருடனாய்த்தா னிருக்கும் என்பது கருணாகரர் அறிந்ததே. இவ்விரு திறத்தார்க்கும் என்றும் அறாது தொடரும் பகையை அறியாதார் இலர். எனினும் இச்சமயம் அப்பகை போராக முடிந்ததன் காரணம் யாதெனத்தெரிந்து கொள்ளக் கருணாகரர் முயன்றனர். பெருங்குன்றத்தைப் புகலிடமாக நாடி அவர் வந்திருக்கும் இப்போது அங்குப் போர் ஒன்று நிகழுமென்றது அவருக்குக் கலக்கத்தை யுண்டாக்கியது. எனவே இச்செய்தியைப் பற்றி அவர் பூதாரனை மேன்மேலும் கேட்டு விஜயதசமியன்று இரத்தினபுரியில் நடப்பதற் கிருக்கும் போரின் தன்மையை அறிந்து கொண்டார். கந்தனே இக் கடுஞ் சமர்க்குத் தலைமை வகிக்க வேண்டு மென்பதை நினைக்கக் கருணாகரருக்கு மிக்க வருத்தம் உண்டாயது. சிறு பூசற்கு முற்படும் கந்தன் கடுஞ்சமரிற் பிற்படுவான் என்று அன்னான் குணமறிந்த அவர் எண்ணினார். இன்னவித எண்ணத்தால் மனங்கலங்கிக் கருணாகரர் பூதாரனைப் பார்த்துப், "பூதாரா, இவ்வேளை யுன் தலைவனை நான் அடைவதிற் பயனில்லை என்று நினைக்கின்றேன். யான் திரும்பிப் போதலே நலம். உன்னுடைய இவ்வினத் தலைவனுக்கு ஆபத்து நேர்ந்த வேளையில் என்னிடம் அவனைக் கையடைத்துக் கொடுத்திருந்தார் அவன் தந்தை. நானுமோ ரிழுக்கின்றிக் காத்து வளர்த்தேன். இப்பொழுது என் மேடு மடுவாயிற்று. மதமாம் மதம்பிடித்து மடத்திலுள்ள கபடர்கள் என்மீது பொய்யுடைய குற்றம் ஏற்றி என்னை வதைக்க முயல்கின்றனர். முன் அவற்கு நான் செய்த நன்றிக்கு ஈடாக இன்றென்னை உன் வேந்தன் காப்பனென இங்குப் போந்தேன். நன்றியை நினைக்கவல்ல முதுவேந்தன் மாண்டனன். இளையோனும் நீ கூறு மவ்வண்ணம் இடருற்றுக் கிடக்கின்றான். நன்றி நினைத்து இக்காலம் தஞ்சமெனப் போந்த என்னைத் தாங்குமவர் எங்குளர்!" என்று தனது கையற்ற நிலையைத் தெரிவிக்கப் பூதாரன் மிகச் சினந்து இவை கூறினான்.

"கருணாகரரே, நீருற்ற முதுமையால் பேதுறுகின்றீராயின் என்செய்வது! மற்று இங்கும்மைக் காப்பவரில்லாக் காரணத்தால் சஞ்சலம் எய்தவேண்டா. அடைக்கலமடைந்தோரை அளித்தலே முதற்கடனெனக் கருதும் எமதண்ணல் தனக்குற்ற துயரையும் தீமையும் ஒருபொருளாக மதியான். வயதிற் சிறியோனாயினும் தன்குறை தீர்வுள்ளா அவன் தொல்குலவண்மையோ உயிர்க்கின்ற காற்றுடன் உறைந்து கிடக்கின்றது. நன்றி பாராட்டுதல் என்னும் அவ்விழிதகை நோக்கம் நகர்வாழ் மாக்கள் கற்றதொரு நாகரிகம். இயற்கையி லீடுபட்டு இவ்வனம்வாழ் வேடுவர் அறியோம் ஐய அச்செய்தி. நன்றி செய்தோர்க்கு எதிர் நன்றி செய்தல் மனத்தின் இடையாய பான்மை."

பூதாரன் சொல்லிய சொற்கள் கருணாகரருக்கு வியப்பு உண்டாக்கின. நன்றி மறவாமை இடையாளர்தம் தன்மையே என்றால் என் செய்வார். ஆதலால், "பூதாரா, உபகாரம் செய்தவர்க்கு உபகாரம் செய்தல் உத்தமம் அன்றாயின் மற்றுன் கருத்து யாது? நகர் வாழ்வோர் நாகரிகத்தைப் பழித்த நீ இவ்வரையகம் வாழ்வோர் நாகரிகத்தைப் பற்றி என்ன சொல்கின்றாய்?" என்றனர்.

"நண்பர் நொதுமலர் என்று ஓரங் கருதாது நடுநிலை வகித்து நாடினோர்க்கு நன்மை செய்வதே வேடுவர் மேற்கொண்ட விரதம் ஆகும். அதுவன்றி முன்னொரு நாள் உனக்கு ஒருவன் செய்த நன்மையை மறவாது இன்று அவனுக்கு நன்மையைச் செய், என்னும் விதியில் முன்னுனக்கு நன்மை செய்யாதவனுக்கு நீ இன்று நன்மை செய்யா தொழிக, என்னும் பொருள் மறைந்து கிடக்கக் காணாது நீர் இருப்பதென்னே! பெருங்குன்றத்து வசிப்பவர் நோக்கிற்கு இப்பழிபடு பொருள் மலையிலக்காய் இருக்கின்றது!"

"ஆதலால்!"

"ஆதலால், மற்றென், எம் மகேந்திரப் பெருமானிடத்தில் நீர் முன்செய்த உதவியை எடுத்தெடுத்தோதி உந்தம் கீழ்மையைப் பாராட்டவேண்டா. உயிர்ப் பயங்கொண்டு இங்கு நீர் கூடியிருப்பது ஒன்றுமே கூறின் அமையும்." என்று பூதாரன் உரையை முடித்தான்.

கந்தன் குணமெலாம் கருணாகரர் அறியாததோ. உயிர் கொன்றும் வழியலைத்தும் வாழுமிவ் வனசரர் வாழ்க்கையும் கருணாகரர் அறிவார். செய்ந்நன்றி யறியென்ற மெய்த்திறம்கண்ட மேலவர் வாக்கிற்கும் இழிவுண்டாகும்படி அறத்தினின் திறம் பேசிய பூதாரனது மொழிகேட்டு நகர்க்குரிய நாகரிகம் தோய்ந்த கருணாகரர் எய்திய இறும்பூதிற்கு அளவில்லையாயினும் கந்தன் தன்னைக் காப்பனெனும் உறுதிச்சொல் அவர் மனதில் பெரியதோர் ஆறுதலளிக்கப்புகுந்த சமயத்தில் பின்னுமொரு சந்தேகம் தடுத்து, "ஏ, பூதாரா, நீயுரைத்த யாவுங் கேட்டேன். முன்னுதவி செய்தாரையும் செய்யாதவரையும் ஒன்றாய்ப் பாவித்து இடுக்கண் களைவதே நும் பெருங்குன்றத்துத் தத்துவம் என்றியம்பினாய். ஆனால் முன்முறை யொருவன் தீமை செய்தவனாயின் அவன்மாட்டு நீங்கள் யாது செய்வீர்? நன்றி மறப்பதைப் போலவே அல்லதையும் அன்றே மறப்பீரோ, மற்றுப் பகைத்த மாத்திரம் பகையே பாராட்டுவீரோ? உங்கள் தலைவன் மனங்கோண நான் நடந்திருப்பேனாயின் இன்று தஞ்சமென வரும் என் வரவை அவன் எவ்வாறு ஏற்பான், செற்றமுண்டோ செப்பாய்? இது இயம்புதி.," என்று கவற்சியுடன் வினவினர்.

காந்திமதிக்குத் தந்தையாய கருணாகரர் மனதில் தோன்றிய கவற்சிக்குக் காரணம் எதுவென உணர்தல் அரியதன்று. காந்தியின் முகமநோக்கி அருள்பார்த்துக் காத்திருந்த கந்தன் அவன்பொருட்டுக் கொண்டிருந்த நோக்கம் முற்றிலும் கருணாகரர் கண்களுக்குக் கரந்திருக்கவில்லை. அன்னான் குறிப்பறிந்து தன் மகளை நல்காத கோபம் அவனுக்கு இருத்தலுங் கூடுமென்றெண்ணி அதனால் தன்னிலை என்னாமெனும் ஐயம்தெளியவே பூதாரனை அவர் இவ்விதப் பொதுவினாவாகக் குன்றமுறைவோர் குணத்தைப்பற்றிக் கேட்க நேரிட்டது. பூதாரனோ இக்கேள்விக்குச் சிறிது சிரித்துப் பின், "விடையும் உம் கேள்வியிலேயே அடங்கியிருக்கின்றது. தஞ்சம் தஞ்சம் என வருமவன் எம்மிறைவனது பகைக்குக்கூடப் பாத்திரனல்லனென்பது வெளிப்படை அல்லவோ! இணையோடல்லாது இகல் கொள்ளார் எம் செம்மல். சரண்புகுந்தபின் செற்றத்திற்கோர் இலக்கேது! காம்பற்றிப் போர்கேட்கும் கண்டகரைத் தள்ளிச் சிரமிடறும் தாளிருக்கச் சேர்ந்து வரம்வேண்டிக் கால்பணிந்தால் கைகொடுத்துக் காப்பதே குன்றமர் வேல்விளங்கும் வேந்தன் திறம்." என்று ஓதினான்.

இன்னவாறு இருவர்க்கும் உரை பெருகப்பெருக வழி சுருங்கி மாலை வந்தகலா முன்னம் அவர் தம் பயணத்தை முடித்தனர். அங்குப் பெரியதொரு ஆலமரத்தினடியில் பட்டுவிதானம் வேய்ந்த படமாடம் ஒன்று அமைக்கப் பெற்றிருந்தது. அம்மாடத்தினுள் மனிதர் பலர் குழுமி இருந்ததை, அவர் தம்முள் பேசிய ஒலியால் வந்தவர் அறியலாயினர். எனினும் அழையாமல் நுழைய விரும்பாத கருணாகரரும் பூதாரனும் அயல்நின்று அரசற்குத் தம் வரவைத் தெரிவிப்பது எங்ஙனம் எனக் காத்திருக்கையில் இடைப்பொழுதை யாதானும் பேசிக் கழிக்கக் கருதிய கருணாகரர் விதானத்தைக் காட்டிப், "பூதாரா, இப்பட்டு என் தறியில் நெய்ததே. கந்தனுங் கூட இழையொன்றிரண்டு அதில் ஓட்டியிருக்கலாம்......" என்று இயம்பி வருகையில் பூதாரன் துணுக்குற்றுக் கருணாகரரது வாயைத் தன் கையாற் பொத்தி, "அய்ய, உந்தம் புன்தொழிற் புத்தியைக் காட்டிவிடுகின்றீர். வேல்பற்றி வாளோச்சி வில் வளைக்கும் எங்கோமான், நூல் நக்கி நாவில் இழைநெருடு நொய்மையால் சீர்கெட்டு நும் வீட்டில் திரிந்தநாள் பேர் சொல்லி எங்கட்குப் பெருஞ்சின மூட்டவோ, இது செப்பினீர்" எனத் தகைந்தனன்.

பூதாரனது சிவந்த கண்களும் துடித்த கைகளும் கருணாகரர்க்கு அச்சம் விளைத்தன. தான் பேசிய வார்த்தை நெடுநேரம் அவன் மனதில் தங்காவண்ணம் வேறு சில சொல்லி அதை மறைப்பதற்கு எதுபற்றிப் பேசலாம் என்று சிந்தித்தார். கத்தி கேடயம் முதலியன மரத்தில் மாட்டப் பெற்றிருக்கக் கண்டு, "நண்ப, இக்கேடகங்கள் நன்றாயிருக்கின்றன. எம்மூர்க் கம்மியன் கலாநாதன் செய்தவைகளோ, இவை?" என்றனர்.

"நல்லதொரு ஓரையிற் கருணாகரரே நீர் இவ்விடம் வருதற்கு எழுந்திருக்கவில்லை என்றெண்ணுகின்றேன். வாயாற் கெடுவதற்கு வேண்டிய வகையே தேடுகின்றீர். அக்கம்மியனின் நாமத்தைக்கேட்பினும் வடவையால் கொதிக்கும் கடலில் பெருங் காற்றடித்ததென எங் கோமகன் சீறிச் சுழல்கின்றனன். அன்னதன் காரணம் அடியேங்கள் அறிந்ததில்லை. எதுவாயிருப்பினும் எம் மருந்தலைவன் மஹேந்திரன் சிறுவிதியால் உம் தாழ்குடிலை அடுத்துவாழ நேர்ந்த காலத்தில் நிகழ்ந்ததெதையும் நினைப்பூட்டாமல் நாகாத்துப் பேச முயலீராயின் இப் பெருங்குன்றத்தவ ரிடையில் உம்முயிர்க்கு யான் உத்தரம் சொல்லமாட்டேன்."

கம்மியன் பேர் கேட்கக் கந்தன் தரியாத காரணம் தனக்கல்லவோ தெரியும், என்று கருணாகரர் நினைத்ததைப் பூதாரனுக்குச் சொல்லவில்லை. இதற்கிடையில் கூடாரத்தின் உட்புறத்தினின்று ஒருவன்வரப் பூதாரன் அவன்பால் சில செப்பி யனுப்பவும், அவன் உட்சென்று சிறிது பொழுதில் மீண்டுவந்து பூதாரனையும் கருணாகரரையும் உள்ளழைத் தேகினான்.

பன்னிறப் பட்டாலமைந்த அம்மண்டபத்தினுட் சென்ற கருணாகரர், மகேந்திரனை தன் பழைய கந்தன் அரசற்குரிய அலங்காரத்தோடு மந்திரக் கிழவரும் மற்றுள அவை முதல்வரும் புடைசூழப் பொன்னாதனத்தில் வீற்றிருக்கக் கண்டார். கண்டவர் அவனருகு சேரக் கந்தனும் அவருக்குக் கையமர்த்தி ஆதனம் குறித்தானல்லாது வாய்மொழி யொன்றுங் கூறவில்லை. ஆதனத்தமர்ந்த கருணாகரர் அங்கு முடிசூடும் திருவிழா நடைபெறுகிறதென்று நிகழ்ந்த நிகழ்ச்சிகளால் அறியலாயினர். எனினும் ஆண்டிருந்தோர் முகங்களில் உவகையோடு கவற்சியும் கலந்தே இருந்தது. தம்முள் சிற்சில பேசிக்கொண்டனர். கந்தனை யிரங்கி நோக்கினர். கந்தனது காதுடன் வந்து இரண்டொரு சொல் இயம்புவர் சிலர். அவர்களுக்குக் கந்தனும் தாழ்ந்த குரலாலே பதிலளிப்பான். இதற்கிடையில் அம்மண்டபத்தின் ஒருபாகத்தில் தொண்டகம் கறங்கப் பல்வித வாச்சியம் முழங்கின. அவ்வாத்தியம் முழக்குவோர் ஊக்கத்தைக் காணின் பறையெலாம் அன்றே இரியுமெனவும் கொம்பெலாம் அன்றே பிளக்குமெனவும் தோன்றின. இங்கெழுந்த இவ்வொலிக்கு எதிரொலியாய்க் கூப்பிடு தூரத்திற்கப்பால் மற்றொரு வாத்தியத்தொகுதி ஆரவாரத்துடன் நெருங்கி வந்தது. சிறிது நேரத்திற்குள், வலி விளங்கும் யாக்கையர், உரந்திரண்ட தோளினர், அகன்ற மார்பினர், வீரமேவைப்பாய முகத்தினர் காளையரெண்மர் மண்டபத்தவையின் நுழைந்தனர். அவர்களுள் முதற்போந்தவன் வன்சிறைக் கழுகின் உருவம் தீட்டிய கொடியொன்றைக் கையின் ஏந்திப் பெருமையுடன் நடக்க, மற்றவர் மின்வீசும் வாள்தாங்கிய கையினராய்ப் பின்தொடர்ந்தனர். மகேந்திரன் வீற்றிருந்த இடம் அடைந்ததும் அவ்வெண்மரும் அவன்கால் பணிந்து மெய்காப்பாளரெனச் சூழ்ந்துநிற்க உள்ளும் புறமும் ஏங்கிய பல்லியங்களெல்லாம் முன்னின் மிக முழங்கலாயின. அந்தப்போது கண்டோரஞ்சத் திரண்டுயர்ந்த தோற்றத்தானொருவன் வாயிலில் தோன்றினான். முன்சென்ற வீரர் எண்மரையும் ஒன்றுகூட்டி உருக்கி வார்த்தாலும் இவனொருவன் உருவத்திற்குப் பற்றாதென்னலாம். முகத்தினிற் பாதி அடர்ந்து வளர்ந்த மீசைமறைக்க மிகுந்ததெல்லாம் கண்ணேயாம். இன்னவன்தன் கறுத்துச் சுருண்ட குஞ்சி திண்ணிய கண்டத்தில் புரளவும் குன்றிரண்டு குலாவிக் குடிப்புகுந்த தோள்கள் விளங்கவும் மிதித்தவிடந் தரை நெளியவும் அக்கூடத்தின் நீளத்தை யடிமூன்றா லளந்து நடந்தான். விண்ணிருந்த மீனெலாமிறங்கி மொய்த்ததொரு கனகக்கட்டியென நவமணிபதித்த பொன்முடியொன்று இவன் கையிலிருந்தது. மகேந்திரனுக்கருகு அவன் சார்ந்ததும் அம்மண்டபத்தின்கண்ணிருந்த வஜ்ரதர பரிஜனங்களும் பெருங்குன்றப் பெருமக்களும் எழுந்து நின்றனர். வாச்சியங்களிற் சில மெல்லிய இசையில் நவின்றன தவிர மற்றவெல்லா மோய்ந்தன. மகேந்திரனும் தனதாதனம் விட்டிழிந்து, எதிர்வந்த அப் பெருந்தகையைத், "தினகரத்தந்தாய்" என இறைஞ்சினான். அன்னவாறு வணங்கிய இளவலைத் தனகரன் கையமர்த்திப் பீடத்தின்மிசை இருக்கச் செய்து அவையுளோரைப் பார்த்து இவ்வாறுபேசினான்.

"உத்தமர்காள், ஆற்றலோடு அருளும் வாய்ந்த நம் அஞ்சனவர்மனைக் கண்ணிலாக் காலனுக்கு வெண்பலி யாக்கினோம். இத்துயர் மறக்க நமக்கு எந்நாளும் இயலாதாகையால் என்னுயிர் நும்முயிர் போமளவும் அது உடனுறையும் வன்மைத்தாகும், ஆயினும் இடையிடையே சிறிது மறப்பதற்குரிய செய்கைசில இந்நாள் நிகழ்த்த வேண்டியவரா யிருக்கின்றோம். புண்பட்ட கண்ணிற்கு நன்மருந்தாகி நம்மிள வள்ளல் மகேந்திர வேந்தன் இவன் தொல்குல முன்னையோர் செய்த தவமெல்லாம் திரண்டெழுந்தாலென்ன நம்முன் நிற்கக் கண்டும் காலமாருதக் கயவரோடு யாம் இடுதற்கிருக்கும் சமரை நினைத்தும், இரத்தினபுரி மன்னவன் இட்ட ஆணையைக் கேட்டும், இறந்தவனை நம்மொரு மனத்திலும் இருப்பவனை இனி நம்மிரு கையிலும் தாங்கி நிற்றல் நம்மனோர் கடன். வருகின்ற விஜயதசமியன்று இத்தொல்லரசு தாழுமோ தழைக்குமோ வென்பதை உலகங் காணும். அன்னவேளை என்னருந் திண்ணிய மைந்தர் எண்மரும் யானும் எம்மிறைக்கு மறப்பணியாற்ற நினைந்துளேம். மற்றைய பதினெண்மர் நும்மவரில், போர்க்களம் வீழ்ந்த

வர் வாழ்ந்தா ரென்னும் கருத்துடைய சூரரைப் பின் தெரிந்துகொள்வோம். முன்னர் நாம் நம்மரசற்கு முடி சூட்டுவாம் "

தினகரனிது உரைத்தபோது மங்கல வாத்தியங்கள் முழங்க, அவைக்கண் இருந்த முதியோர் ஆசிகூற, யாவரும் எழுந்து தம் கையாலும் வாயாலும் ஒகை விளம்பினர். தினகரன், மகேந்திரனிற்கு முடிசூட்டி வெற்றி வாளொன்றும் அளித்தனன்.

அவை கலைந்தது. மகேந்திரன் பூதாரனைத் தனியே யழைத்து ஏதோ பேசிப் போயினன். அவனும் கருணாகரரைத் தன்னுட னழைத்துச் சென்று ஓலைச் சிறுகுடிலொன்றிற் சேர்த்து, இராப்போதை அங்குக் கழித்துக் காலையில் அரசனுடன் பேசிச் செல்லலாம் என்றுகூறி அவருக்கு உணவுங் கொண்டுவந் தளித்துவிட்டகன்றான். உண்டவுடன் இளைப்பு மேலிடக் கருணாகரர் துயில் போயினர்.

T. N. சேஷாசலம்.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

அன்பு ஆராய்ச்சி.

[406-ம் பக்கத் தொடர்ச்சி]

அன்பின் அருநிலை.

தன்னுணர் வற்றநிலை :—அந்நிலையைத் தன்னுணர்வற்ற நிலை என்பர். "தமியராதல்" என்றார் இறையனார். நக்கீரனார் தமியராதல் என்பது தம் முணர்வினர் அல்லராதல். தம் முணர்வினர் அல்லர் ஆதல் என்பது என்னோ எனின் தலைமகற்கு அறிவு நிறை ஓர்ப்புக் கடைப்பிடி என்பன குணம் இந்நான்மையும் தலைமகற்கு வேட்கையான் மீதூரப்பட்டுப் புனல் ஓடுவழிப்புற் சாய்ந்தாற்போலச் சாய்ந்து கிடப்பது. இனித் தலைமகட்கு நாண் மடம் அச்சம் பயிர்ப் பென்பன குணம் இந்நான்மையும் புனல் ஓடுவழி புற் சாய்ந்தாற்போல வேட்கையான் மீதூரப் பட்டுச் சாய்ந்து கிடக்கும். வேட்கை என்பது என்னோ எனின் ஒருவர் ஒருவரை இன்றியமையாமை அவ்வின்றியமையாது நின்ற வேட்கை எல்லா உணர்வினையும் நீக்கித் தானேயாய் நாண்வழிக் காசு போலவும் நீர் வழி மிதவை போலவும் பான்மை வழியோடி இருவரையும் புணர்விக்கும் என்பது. ஆதலால் தமியராய்ப் புணர்தல் தலைமையோடு மாறுகொள்ளாதென்பது என்று உரைகூறுவர். பின்னரும் "மெய்யுறுவதாகா தென்னும் தெரிந்து உணர்ச்சியுண்டாயின் தமியன் என்பதனோடு மாறுகொள்ளும் என்பது" என்றும்; "அல்லதூஉம் தெரிந்துணர் வுண்டாமே எனின் அன்பினான் நிறைந்தார் என்பது அமையாது. என்னை நிறைந்திருந்தோர் கொள்கலம் பிறிதொன்றற்கு இடங் கொடாதது போல என்பது" என்றும் இதனை வற்புறுத்துதல் காண்க.

தன்னுணர் வற்ற தனிப் பெருநிலை :—தன்னுணர்வற்றநிலை அறிவற்ற மடயன் நிலை அல்ல. அஃது யான் என்னும் முனைப்பற்ற இடம் இன்பத்தில் திளைப்பானும் தன்னை மறந்து தனித்து நிற்கின்றான். அஃது அறிவு மழுங்கி அடங்கிய நிலையல்ல; அறிவு கொழுந்துவிட்டுப் பேரொளியாய் எரிந்து நிற்கும் நிலை. நமது மனமானது ஓர் பெருங்கடல். அதிலே உறைப்பு மிகுதியால் உண்டாகும் பனிக்கற் பாறைபோன்றது நமது சிற்றறிவு. அப் பனிக் கற்பாறை முழுதினையும் நாம் காண்பதில்லை. விழிப்பு நிலையில் ஏதானும் ஒரு பொழுதில் ஏதானும் ஒரு மூலையே மனக்கடலின் நீர்மட்டத்திற்குமேல் எழும்பித் தோன்றுகின்றது. மற்றைய மூலைகள் கீழ் மறைந்து கிடக்கின்றன. வெளியே தோன்றுகின்ற மூலை எவ்வளவோ அவ்வளவுதான் நமது அறிவும். மற்றவற்றை மறந்துவிடுகின்றோம். மிஞ்சிவருமானால் நெஞ்சில் இருக்கிறதென்கிறோம். ஒருபோது தோன்றும் மூலை மற்றொருபோது தோன்றுகிறதில்லை. உலகப்பொருள்களை அப்போதப்போது நாம் கண்டுவரும்போது அவைகள் அந்தப் பனிக்கற்பாறையைத் தாக்குகின்றன. இவ்வாறு காற்றடிக்குமானால் கற்பாறையும் அசைந்து உருள்கின்றது. பெரும் புயற்காற்றுப் பெருங்கடலில் பின்னும் முன்னும் கலந்தடிக்குமானால் பனிக் கற்பாறையும் கீழது மேலதாய் மேலது கீழதாய்ப் புரண்டுருண்டு கவிழ்ந்து போகின்றது. அதனால்தான் ஒருவன் திடீர் என முன்னிருந்த நிலையில் நின்றும் முற்றும் மாறிவிடுகின்றான். நாட்டில் வாழ்ந்தவன் காட்டில் வாழ்கின்றான். நாவிற்கு இனியவற்றை உண்டு வந்தவன் நாவுணர்வையே மறந்து உப்புச் சப்பில்லாவற்றை உண்டு மகிழ ஒருப்படுகின்றான். முன்னே நினைவிற்கு வாராதவற்றை உடனே அறிகின்றான். இஃதொரு பெருவியப்பே. நாம் காண்பன கேட்பன செய்வன நினைப்பன இவையெல்லாம் நமது மனமெனும் கடலிலே தமது நிழலைப் பதியவிட்டுச் செல்கின்றன. நாம் அவற்றை ஊன்றிப் பாராவிடினும் அவற்றின் நிழல் அங்கே அச்சம் அவைபோலவே விழுந்துவிடுகின்றன. மனம அவற்றைப் புகைப்படம் எடுத்துக் கொள்கிறதெனலாம். அவற்றை மறந்து விடுவோமானால் அவை கீழேபோய் அமிழ்ந்து தலையை நீட்டி நின்று மேலேவர அற்றம் பார்த்துக் கொண்டே இருக்கின்றன. நீரில்விழும் நிழல்போல இவை மறைந்து போகின்றவை அல்ல. இறைவனது நிழல் கண்ணாடியில் விழுந்தால் எங்ஙனம் ஆலால சுந்தரராய் உயிர்பெற்று எழுந்து கடவுட்டன்மை எய்துகின்றதோ அங்ஙனமே மனக்கடலில் விழுந்த நிழல்கள் எனும் நினைவுகளும் மாறி அழியாத தன்மை பொருந்தியனவாகும். அவ்வாறு கீழ் அழுந்தியவைகள் பின்னோர் காலத்திலே ஏதாவதுபுயற்காற்று அம்மனக்கடலில் அடிக்குமானால் மேல்கிளம்புகின்றன. மேலிருந்தவை கீழே போகின்றன. அந்த நிலையில் அவ்வாண்மகன் புத்தம் புதியவனாய் விடுகின்றான். ஒன்றுமறியாத ஒருசிறிய பணிப்பெண் திடீரென ஹிப்ரு மொழியில் உள்ள பைபிலை முதலிருந்து கடைசிவரை முற்ற முடிய முற்றுப்புள்ளி, காற்புள்ளியோடு ஒப்புவித்தாள். பேய் பிடித்ததென்று பெண்ணிற்கு வேண்டியவர்கள் வேப்பிலை அடித்தார்களாம். ஆனால் உண்மை என்ன? அவள் இளம் பெண்ணாக வேலைசெய்து கொண்டிருக்கையில் ஒரு பாதிரியார் படிப்பதைக் கேட்டிருந்த இவள் மனதிலே இவளுக்குத் தெரியாமல் இவை எல்லாம் பதிந்துவிட்டன. ஹிப்ரு மொழியிலே, ஒரு சொல்லேனும் சுட்டுப்போட்டாலும் இவளுக்குத் தெரியாது. அவ்வாறிருந்தும் பின்னோர் காலத்தில் துன்பமிகுதியாலோ வேறெதனாலோ நரம்புக்கிளர்ச்சி உண்டாகவே இவளது மனம் கலங்கிப்போயிற்று. கீழ் இருந்தது மேல்வந்தது; பைபிலையும் ஒப்புவித்தாள். ஆகவே நாம் அறிவு என்று பேசிக்கொள்வதெல்லாம் மனக்கடலில் மிதக்கும் பனிக்

கற்பாறையில் நீர் மட்டத்திற்குமேல் தோன்றும் பகுதியைத்தான். உண்மையில் அறிவாவது அக்கடல் முழுதுமேயாகும். இங்கு மனம் மனம் என்று உலகவழக்குப் பற்றி உள்ளநிலை உயிர்நிலை முழுதினையும் குறிக்கிறோம். இனிப் பனிக்கற் பாறை கடலில் உருகிக் கடலோடு கடலாய் கலந்து ஒன்றாய் நின்றபோது அறிவில்லை என்று எவ்வனம் சொல்வது. முக்காலமும் உணர்ந்த முடிவிடம் அதுவேயாகும். அஃதே பேரறிவு, மற்று நாம் உலகில் கூறிவருவதோ சிற்றறிவு. ஆகவே தம்முணர் வல்லராதல் என்றால் யான் எனும் முனைப்பற்று முற்றறிவில் அழுந்திவிடுதலே யாகும். அங்கு இது நல்லதா? இது தீயதா என்ற ஆராய்ச்சி இல்லை. ஏன்? இவ்வாராய்ச்சி யெல்லாம் ஐய மெழுந்த இடத்திற்றானே கிளம்புகின்றன. முற்றறிவில் ஐய மெழுந்தால் அஃது முற்றறிவன்றே! அம்முற்றறிவாம் கடலில் ஒன்றாகிய மக்கள் அக்கடலின் பெருக்கு எங்கே பார்த்துச் செல்கின்றதோ அங்கே செல்வர். "அவனே தானே ஆகிய அந்நெறி ஏகனாகி இறைபணி நிற்பர். வேட்கை நீர்வழி மிதவைபோலப் பான்மை வழியோடி இருவரையும் புணர்விக்கும்" என்றானன்றே நக்கீரனார். பால் என்றால் ஊழ் அல்லது தலை எழுத்து அல்லது கடவுள் (உ-ம் தெய்வத்தால் ஆகா தெனினும்) அல்லது இயற்கை எனலாம். இருவரும் தம் முணர்வற்ற நிலையில் தாம் எதற்காக உலகில் தோன்றினரோ அதனை முடிக்கின்றனர். இயற்கையோடு இயைந்து விடுகின்றனர். கடவுளோடு கலந்து விடுகின்றனர். எல்லாம் அவன் செயலாய் விடுகின்றது. இயற்கையின் வலியாலே இரும்பைக் காந்தம் வலிப்பதுபோல ஒருவர் மனம் ஒருவரை வலித்திழுக்க இருவரும் இயற்கை அன்னையின் இன்னருளால் ஒன்றுதலே இறைவனும் இயற்கையும் அன்புருவம் என்பதை வற்புறுத்தும் எனக் கீழ்வரும் சொற்பொழிவு விளக்குகின்றது.

அன்பே உலகெல்லாம் :—"உலகமெங்கும் நீக்கம் அற நிறைகின்ற ஒரு சக்தி உண்டு. அது ஆங்கில நூல்களில் காந்த சக்தி அல்லது மின்சாரம் (Electricity) என்று சொல்லப் படுகின்றது. இது அக்கினியின் அம்சம். உபநிஷத்துக்களில் பிராணன் என்று சொல்லப்பட்ட சக்தியின் ஒரு அம்சம் இது. இதுமேல் (Positive or high potential)என்றும் கீழ் (negative or low potential) என்றும் இருபான்மையது. இஃது ஒரு அற்புதமான மிதுனம். சாதாரணமாய் இவ்விரண்டும் கலந்து இருக்கும் நிலையில் இதற்கு எவ்விதச் செய்கையும் அஃதின்மையால் எவ்விதக் காட்சியும் இல்லை. பலவித உபாயங்களினால் இஃது இரண்டாகப் பிரிக்கப்படுமாயின் அப்போதுதான் புலனுக்கு வெளியாகும். அந்நிலையில் ஏதேனும் வேலை செய்தல் கூடும். அஃது இரண்டாகப் பிரிந்த நிமிஷம் முதற்கொண்டு பிரிந்தவைகள் ஒன்றுபட அதாவது ஐக்யமாகத் தீவிரமுயற்சி செய்கின்றன. இரண்டும் ஒன்றோடொன்று சேரச் செய்யும் முயற்சியும் அதன் காரணமான ஊக்கமும் இங்குக் கவனிக்கத் தக்கவை. அம்முயற்சி அவ்வூக்கம் உலகப் பொருள்களில் பலவாறாகப் பரிணாமங்கள் கொண்டு விளங்குகின்றன. இது ஜடப்பொருளின்கண் இருக்கும் பொழுது ஆகர்ஷண சக்தி என்றும், சேதன வஸ்துக்களில் இருக்கின்ற பொழுது உயிர் பிராணன் என்றும் பெயர் பெறும். உலக விகாசத்திற்கு அதிஷ்டானமாக இச்சக்தி இருக்கின்றது......விகாசமாய் இருக்கின்ற உலகத்திலுள்ள சலனங்கள், சக்திகள் ஸ்வரங்கள் பிராணன்கள் யாவும் இந்தச் சக்தியின் பலபிரிவான பரிணாமங்களே. ஒரே ரஸமானது வேர் இலை காய் கனி பழம் வித்தாகப் பரிணமித்திருக்கின்றது போலவே இந்தச் சக்தி பரிணமித்திருக்கின்றது என்பதை அறிவிப்பதற்காக இதை ரஸம் என்று உபநிஷத்துக்களும் கூறுகின்றன. இது ஈசுவர அம்சம். தமிழ் நூல்களில் ஈரம் என்றும் உயிர் என்றும் இதற்குப் பெயர் வழங்குகின்றன...பிரகதாரண்ணிய உபநிஷத்தில் யாக்ஞயவல்கிய மஹரிஷிக்கும் அவர் அறிவுள்ள பத்நி---மைத்ரேயிக்கும் நடந்த சம்பாஷணையில் ஆன்மா ஆன்மாவைத் தேடிச் சேருகின்றமையால் அந்நிகழ்ச்சி அன்பெனப் பெறும் என்று உபதேசம் விளங்குகின்றது. "சிவ" என்றால் வசீகரிக்கும் தன்மை. அதாவது ஒன்று மற்றொன்றைப் பற்றி இழுக்கும் தன்மை. ஆகர்ஷண சக்தி என்று ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் வியாக்கியானம் செய்துள்ளார்.

மின்னொளியாள் :—மின்சார சக்தியை மின்னொளியாள் எனவும் மேல் (Positive) என்பதை முன்னவள் எனவும், கீழ்(Negative) என்பதைப் பின்னவள் எனவும் ஆற்றல்களை (சக்தி)ப் பெண்ணாகக் கூறும் வழக்குப் பற்றி வழங்குவோமாக. காதலர் இருவரும் முன்னவளாம் மின்னொளியாளும் பின்னவளாம் மின்னொளியாளும் ஆகின்றனர். முன்னவளும் பின்னவளும் கண்டவுடன் ஒன்றுதலே இயற்கையின் அமைப்பாதலின் காதலர் இருவரும் கண்டதும் தம்மை மறந்து காதல்கொண்டு ஒன்றுகின்றனர்.

இயற்கைப் புணர்ச்சி :—உதயணன் பிரச்சோதனிடத்தே சிறைபட்டிருந்தான். யானை ஒன்று களிப்பேறி நகரை யழித்துவந்தது. அதனை அடக்க உதயணனைச் சிறையினின்றும் விடுவித்தனர். யாழினை மீட்டிப் பாடியபோது யானை வெறி அடங்கி அவனுக்குக் கீழ்ப்படிந்து நடந்தது. பிரச்சோதனன் தனது மனைவி மக்களோடு அவனுக்குச் சிறப்புச் செய்யவந்தான். பிரச்சோதனனுடைய பெண்ணாகிய வாசவதத்தையும் உதயணனும் ஒருவர் ஒருவரைக்கண்டு காதல் கொண்டு தம்முணர்வற்றனர். களிறும் பிடியும் மாவெட்டியான்களைப் பாராது ஒன்று சேர்ந்தாற்போல உள்ளத்தால் ஒன்றாயினர். இதனைக் கொங்குவேள் என்பார் தமது பெருங் கதையில் தமிழ் வழக்கைப் பின்பற்றி மிக அழகாகப் புனைந்திருக்கின்றார்.

"தென்கடல் இட்டது ஓர் திருமணி வான்கழி
வடகடல் நுகத்துளை வந்துபட்டா அங்கு
நனிசே ணிட்ட நாட்டினர் ஆயினும்
பொறைபடு கருமம் பொய்யாது ஆகலின்
சிறைபடு விதியின் சென்று அவள்குறுகி
மதியமும் ஞாயிறும் கதிர்விரிந்து ஒடிக்
கடல்நிற விசும்பின் உடன் நின்றாங்குப்
பைந்தொடிச் சுற்றமொடு தந்தை தலைத்தாள்
ஆயத் திடையோள் பாசிழைப் பாவை
யானை மிசையோன் மாமுடிக் குரிசில்
இருவரும் அவ்வழிப் பருகுவனர் நிகழ
யாதனில் சிதைந்ததுஇம் அடல்பெருங் களிறென
வேழ வேட்டம் விதியின் வினைய
கதிர்முடி வேந்தன் கண்ணிய நண்பொருட்கு
எதிர்மொழி கொடீஇய எடுத்த சென்னியன்
மன்னவன் முகத்தே மாதரும் நோக்கி
உள்ளமும் நிறையும் தன்னிடைக் கலங்கி
வண்டுபடு கடாஅத்த வலிமுறை ஒப்பன
பண்டுகடம் படாஅ பறையினும் கனல்வன
விடற்கரும் தெருவினுள் விட்ட செவ்வியுள்
தொடக்குவரை நில்லாது தோட்டி நிமிர்ந்து

மதக்களி றிரண்டு உடன்மண்டி யாஅங்கு
இல்வழி வந்தநம் பெருமை பீடுறத்
தொல்வழி வயத்துத் தொடர்வினை தொடா
வழுவில் போகமொடு வரம்பின்று நுகரும்
உழுவல் அன்பின் உள்ளந்தாங்கி
இழையினும் கொடியினும் இடியினும் பிணங்கித்
தேனினும் பாலினும் தீஞ்சுவைத் தாகிக்
குலத்தினும் குணத்தினும் கூடிய அன்பினும்
இனத்தினும் பிறவினும் இவ்வகை இசைந்த
அமைப்படும் காதலும் இமைப்பினுள் அடக்கி
ஒருவயிற் போல உள்ளழி நோக்கமொடு
இருவயின் ஒத்தது."

தெய்வப் புணர்ச்சி :—இவ்வியற்கைப் புணர்ச்சியை அழகுபட ஓர் உவமை வாயிலாகப் புலவர் ஒருவர் புகழ்கின்றார். அன்பு நிலையில் நின்று ஓர் ஆடவனும் ஓர் பெண்ணுங் கூடி இன்பம் துய்த்தனர். பொழுதாகவே தனது வீடுபோய்ச்சேரக் காதலன் எண்ணினான். பெண்ணோ பிரிவினை எண்ணிப் பெரிதும் கலங்கினாள். "எங்கோ கிடக்கும் முகில் ஒன்று எங்கோ கிடக்கும் கடலின் நின்று நீர்முகந்துவந்து பின் எங்கோகிடக்கும் நிலத்தில் பெய்கின்றது. இயற்கையில் உள்ளதோர் இயைபால் இவ்வாறு ஏற்படுகின்றது. அதுபோல நீ எங்கே இருந்தாய் நான் எங்கோ இருந்தேன் உன்னை நானறியேன், என்னை நீ யறியாய், நாம் உற்றாரும் அல்ல உறவினரும் அல்ல, இன்று இயற்கையின் வழி பந்து நமது மனம் இரண்டும் ஒன்றாக இழைந்து விட்டன. நாமாகவா கூடினோம், இன்று நம்மைக் கூட்டிய இறைவன் இனி நம்மைப் பிரித்து விடுவானோ?" என்று ஆறுதல் கூறித் தலைவன் தலைவியைத் தேற்றினான்.

யாயும் யாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெய்நீர் போல
அன்புடைநெஞ்சம் தாம்கலந் தனவே

என்பதில் செம்புலப் பெய்நீர்போல என்றெடுத்துக் கூறிய உவமையின் அருமையே அருமை. அவ்வருமையைப் பாராட்டியல்லவா அருந்தமிழ்ப் புலவர்கள் அவரை இன்றளவும் செம்புலப் பெய்நீரார் என்று பெயரிட்டு வழங்கி வருவது.

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

தமிழ்ப் பாடம் 22.

நள வெண்பா

(409-வது பக்கத் தொடர்ச்சி)

சுயம்வர காண்டம்.

பூசுரர்தங் கைம்மலரும் பூங்குமுத மும்முகிழ்ப்பக்
காசினியுந் தாமரையுங் கண்விழிப்ப—வாச
மலர்ந்ததேங் கோதையா ளாழ்துயரத் தோடு
புலர்ந்ததே யற்றைப் பொழுது. 114.

பதப்பிரிவு :—பூசுரர்தம் கை மலரும் பூ குமுதமும் முகிழ்ப்ப காசினியும் தாமரையும் கண் விழிப்ப வாசம் அலர்ந்த தேன் கோதையாள் ஆழ் துயரத்தோடு புலர்ந்ததுவ அற்றை பொழுது.

பதவுரை.

பூசுரர்தம் - பிராமணர்களுடைய
கை - கைகளாகிய
மலரும் - மலர்களும்,
பூ - அழகிய
குமுதமும் - குமுத மலர்களும்
முகிழ்ப்ப - குவிந்து கொள்ளவும்;
காசினியும் - உலகிலே உள்ள ஜனங்களும்
தாமரையும் - தாமரைகளும்
கண் - கண்களை
விழிப்ப - திறக்கவும்,
அற்றைப் பொழுது - அன்றையகாலம்
வாசம் - வாசனை
அலர்ந்த - வீசுகின்ற
தேன் - தேனையுடைய
கோதையாள் - மாலையுடைய தமயந்தியினது
ஆழ் - ஆழ்ந்த
துயரத்தோடு - வருத்தத்தோடு
புலர்ந்தது - விடிந்தது.

விளக்கம்:—புலர்ந்தது - விடிந்தது (பயனிலை). எது புலர்ந்தது? அற்றைப்பொழுது - அன்றை இரவுக் காலம் (எழுவாய்). அற்றைப்பொழுது எதனோடு கூடச்சேர்ந்து விடிந்தது? துயரத்தோடு - வருத்தத்தோடு. எப்படிப்பட்ட துயரத்தோடு? ஆழ் துயரத்தோடு. யாருடைய வருத்தமும் அன்றிரவும் ஒன்றாய் விடிந்தன? கோதையாள் ஆழ்துயர் - மாலையை அணிந்த தமயந்தியினுடைய ஆழ்ந்த துக்கம். அந்த மாலை எதை உடைய மாலை? தேன் கோதை - தேனையுடைய மாலை. அந்தத் தேன் எப்படிப்பட்டது? அலர்ந்த தேன் - வீசுகின்ற தேன். எதை அலர்ந்த தேன்? வாசம் அலர்ந்த தேன் - வாசனை வீசுகின்ற தேன்.

என்ன என்ன உடன் நிகழத் தமயந்தியின் துயரமும் இரவும் விடிந்தன? முகிழ்ப்பவும் விழிப்பவும் - சில மூடிக் கொள்ளவும் சில திறக்கவுமாய்ப் பொழுது விடிந்தது. எவை முகிழ்ப்ப? கைம்மலரும்குமுதமும் முகிழ்ப்ப. எப்படிப்பட்ட குமுதம் அது? பூ குமுதம் - அழகிய குமுதம். யாருடைய கைம்மலர்? பூசுரர்தம் கைம்மலர் - (சந்தியாவந்தனம் முதலிய செய்யுங்கால் குவிகின்ற) பிராமணர்களுடைய கையாகிய மலர்கள். சூரியோதயத்தில் மூடிக் கொள்வன அவையாயின் கண் திறப்பன எவை? காசினியும் தாமரையும் - பூலோகத்திலுள்ளவர்களும் தாமரை மலர்களும்.

விரிவுரை :—முன் செய்யுளில் "ஆருயிர்க்கும் உண்டோ அரண்" என்று நாம் அடைந்த சந்தேகத்தைக் கவி, இரவினால் அவள்பட்ட கஷ்டம் அதுவிடியக் கூடவே விடிந்தது என்று கூறித் தெளிவிக்கின்றார். சூரியோதயம்ஆகின்றது. அப்பொழுதுமூடிக்கொள்வது இரண்டு, திறப்பது இரண்டு, விடிவது இரண்டு. சூரியனைக்கண்டு அஞ்சலி செய்கின்ற அந்தணர்களுடைய கைகளும் ஆம்பல் மலர்களும் (இந்தப்பூ இரவில் மலர்ந்து காலையில் மூடிக்கொள்ளும்) குவிந்துபோகின்றன. துயில்நீங்கிய மாந்தர்களின் கண்களும் தாமரை மலர்களும் (தாமரை இரவில் குவிந்திருந்து காலையில் மலரும்) திறக்கின்றன. இரவுப்பொழுதும் தமயந்திதுயரும் விடிகின்றன.

சுரர் என்றால் தேவர்கள் என்று அர்த்தம். வானத்தில் இருக்கும் தேவர்களைப்போல்பிராம்மணர்களைப் பூமியில் இருக்கும் தேவர்களாக் கருதி அவர்களுக்குப் பூசுரர் என்ற பேர்வந்தது. வில்லிபுத்தூரார் விண்ணவர்களை மாதேவர் என்றும் அந்தணர்களைப் பூதேவர் என்றும் அழைப்பார்.

பரசுராமர் இந்தப் பூமியைக் காசிபருக்குத் தானமாய் அளித்தார். ஆகையால் பூமிக்குக் காசினி என்ற பேர் வந்தது.

குறிப்பு :—இதுவரையில் கற்ற இலக்கணங்களின் சிலவற்றை இங்கு நினைவுபடுத்திக் கொள்வது நலமாகும்.

1. முகிழ்ப்ப, விழிப்ப என்பன இரண்டும் வினையெச்சங்கள். இவை, புலர்ந்தது என்னும் வினைமுற்றைத் தொடர்ந்து முடிகின்றன. வினையெச்சங்கள் காரணம் காரியம் உடனிகழ்ச்சி என்ற மூன்று பொருள்களில் வரும் (52-வது பக்கம்). இங்கே, பொழுது புலர்ந்ததால், கையும் குமுதமும் முகிழ்த்தலாகிய காரியம் உண்டாயின, என்று கொண்டு முகிழ்ப்ப காரியப் பொருளில் வந்த வினையெச்சம் என்று கொள்ளலாம். விழிப்ப என்பதும் அவ்வாறே. அல்லது, முகிழ்ப்பது விழிப்பது ஆகிய இரண்டு காரியங்களும் புலர்தலாகிய செய்கையோடு ஒன்றாய் நிகழ்ந்தன என்பதைக் குறிப்பதாகக் கொண்டு, இவை உடன் நிகழ்ச்சிப் பொருளில் வந்ததாகவும் சொல்லலாம்.

2. காசினி, என்றால் இந்தப்பூமி. இவ்விடத்தில் அது பூமியைக் குறிக்கவில்லை; ஏனென்றால் பூமி கண் விழிக்காது. பூமியிலுள்ள ஜனங்களைக் குறிக்கின்றது. இப்படி ஒரு பொருளின் இயற்கையான பெயர் அந்தப் பொருளைக் குறிக்காமல் வேறு ஒரு பொருளாகி வருமானால் அதனை ஆகுபெயர் என்பர் (50-வது பக்கம்). பலவித சம்பந்தங்களால் ஒருபெயர் மற்றொன்றிற்கு ஆகலாம். உவமையாகு பெயர்க்கும், குணவாகு பெயர்க்கும் உதாரணம் காட்டி யிருக்கிறேன். இங்குக் காசினி என்னும் இடப்பெயர் இடமாகிய பூமியைக் குறிக்காமல் பூமியிலுள்ள ஜனங்களுக்குப் பதிலாக நிற்பதால் இது இட ஆகுபெயர். அப்படியே, ஊர் சிரிக்கும், உலகம் மகிழும், என்று சொல்லும்போது, ஊர், உலகம் இடவாகு பெயர்கள்.

3. ஒன்றுபோல் மற்றொன்று இருந்தது என்று வருணித்தால் உவமையணி என்றும், ஒன்றே மற்றொன்று என்று சாதித்தால் உருவக அணி (70, 129, பக்கங்கள்) என்றும் முன்னமே பல இடங்களில் காட்டி யிருக்கின்றேன். கைம்மலர், என்பது கை ஆகிய மலர் என்று விரியுமாதலால் இது உருவக அணி. மலர்க்கை என்றிருக்குமானால், மலர் போன்ற கை, என விரிந்துஉவமையணியாகும்.

4. இடைச்சொல்லின் இலக்கணத்தைச் சிறிது முன் குறித்துள்ளேன். (369-வது பக்கம்.) ஏ என்பது ஓர் இடைச்சொல். இடைச்சொற்கள்,பெயர்ச்சொல் வினைச்சொற்களோடு சேர்ந்துகொண்டு பல பொருள்களைத் தரும். அவைகளில் தேற்றம் என்பது ஒரு பொருள். அதாவது சொல்ல வருவதைச் சந்தேகமில்லையென்று நிச்சயப்படுத்தல். கொடுத்த கடனைத் திருப்பிக் கொடுக்கின்ற வழக்கமில்லாத ஒருவன், ஒரு சமயம் திருப்பிக் கொடுத்துவிட்டான் என்று வைத்துக் கொள்வோம். இதை இன்னொருவனுக்குச் சொல்லும்போது அவன் நம்புவானோ நம்பமாட்டானோ என்ற சந்தேகத்தை முன்னிட்டு அதை விலக்குவதற்காக, "அவன் கொடுத்து விட்டானே கடனை" என்று ஒரு ஏகாரம் சேர்த்துத் தேற்றுவோம். இது தேற்றப் பொருளில் வந்தது. அப்படியே, முன் செய்யுளில் 'உண்டோ அரண்', என ஓகார இடைச்சொல் விளைத்த சந்தேகத்தை இங்குப் புலர்ந்ததே என்பதிலுள்ள ஏகாரம் விலக்கித் தேற்றப் பொருளில் வந்திருக்கிறது.

வில்லி கணையிழப்ப வெண்மதியஞ் சீரிழப்பத்
தொல்லை யிருள்கிழியத் தோன்றினான்—வல்லி
மணமாலை வேட்டிடுதோள் வாளரசர் முன்னே
குணவாயிற் செங்கதிரோன் குன்று. 115.

பதப்பிரிவு:—வில்லி கணை இழப்ப வெண் மதியம் சீர் இழப்ப தொல்லை இருள் கிழிய தோன்றினான் வல்லி மண மாலை வேட்டுஇடும் தோள் வாள் அரசர் முன்னே குணவாயில் செம் கதிரோன் குன்று.

அன்வயம் :—வில்லி கணை இழப்ப வெண்மதியம் சீர் இழப்ப தொல்லை இருள்கிழிய, வல்லி மணமாலை வேட்டிடு வாளரசர் முன்னே, செம்கதிரோன் குணவாயிற் குன்று தோன்றினான்.

பதவுரை.

வில்லி - வில்வித்தை வல்ல மன்மதன்
கணை - தன்னுடைய பாணங்களை (பயனற்று)
இழப்ப - இழக்கவும்,
வெண் - வெண்மையான
மதியம் - சந்திரன் (ஒளியற்று)
சீர் - தனது சிறப்பை
இழப்ப - இழக்கவும்,
தொல்லை - (இரவுமுழுதும் இருந்து) பழமையான
இருள் - இருட்டானது
கிழிய - கிழிந்து அகலவும்,
வல்லி - கொடிபோன்ற தமயந்தியின்
மணமாலை - சுயம்வரமாலைக்கு
வேட்டிடு - ஆசைப்படுகின்ற
தோள் - தோள்களையுடைய
வாள் - பொலிவுபொருந்திய
அரசர் - அரசர்களுக்கு
முன்னே - எதிரே,
செம் - சிவந்த
கதிரோன் - கிரணங்களையுடைய சூரியன்
குணவாயில் - கிழக்குத்திசையில் இருக்கின்ற
குன்று - உதயகிரியாகிய மலையில்
தோன்றினான் - தோன்றினான்.

விரிவுரை :—இச்செய்யுள் சூரியோதய மாயிற்றென்று செப்புகின்றது. இருள்பிரிந்து வருகின்ற வைகறையில் நிகழ்ந்தனவற்றை முன் செய்யுளிலும், சூரியன் தோன்றுங்கால் நிகழ்வனவற்றை இச்செய்யுளிலும் காண்கிறோம். மன்மதனுடைய ஆட்சி இரவிற்றான் செல்லுமாதலால் வில்லி கணை இழந்தான் என்றார்.

இக்கவி, காமநோய் உற்றவன் நிலையைப்பற்றிப் பேசுகின்ற சந்தர்ப்பத்தில் சந்திரனைக் குறித்துத் தான் ஓரிடத்தில் சொன்னதை மற்ற இடத்தில் மறந்து ஒன்றிற்கொன்று முரண்படப் பாடுவாராயினார். 90-வது செய்யுளில் அந்திமாலையிலே பல்லைப்போல் பிறைச் சந்திரன் தோன்றிவந்தது என்றபடியால், அது முன் நிலவுக் காலமாயிருத்தல் வேண்டும். முன்னிரவில் பல்லைப்போல் காணுகின்ற பிறைச்சந்திரன் மேற்கே தான் தெரியும். தெரிந்து சிலகாலம் இருந்து மறைந்து விடும். பிறகு, கொள்ளிக்கு விள்ளாத கூரிருள் எழுலகும் சூழ்ந்து கருவிக்கும் நீங்காத காரிருளாகி, விழுதுபடத்திணிந்து கழுதும் வழி தேடும்படி கங்குல் இருந்ததென்றால், சூரியோதய காலத்தில் சந்திரன் வானத்தில்

இருந்திருக்க முடியாது. எனினும் புகழேந்திப் புலவர் வெண்மதியம் சீர் இழப்ப (ஒளிமழுங்க) சூரியன் தோன்றினன் என்று அவ்விரவின் செய்தியாகவே கூறு கின்றது வியப்பைத்தரும். ஒரே இரவில் அமாவாசைக் குப்பின் நேர்கின்றதையும் பௌர்ணமிக்குப்பின் நேர்வதையும் கலந்துவிட்டார். ஆனல். ஒட்டக்கூத்தர் கேட்டிருந்தால் என்ன உத்திரந் தந்திருப்பாரோ, அறியேன்.

குறிப்பு:—1. வல்லி, என்பது தமயந்தியை உவமையால் குறிப்பதால் உவமையாகு பெயர்.

தமயந்தியின் மாலைக்கு வீணாசைப்பட்டு வருகின்ற மன்னவர்களைக் கண்டு சிரித்துச் சிரித்துத் தன் முகம் சிவந்தனன்போல் சூரியன் தோன்றினன், என்னும் பொருள் சேர் கதிரோன், என்னும் குறிப்பில் அடங்கியிருக்கின்றது.

முறைசெறிந்த நாளேழு முற்றியபின் கொற்ற
வரைசெறிந்த தோண்மன்னர் வந்தார்—விரை
மாலை துவள முடிதயங்க வால்வளையுங் [செறிந்த
காலை முரசுங் கலந்து. 116.

பொழிப்புரை:—முரசு அடித்துச் சுயம்வரம் தெரிவித்த எழுநாளும் முடிந்தபின், மலையொத்து வெற்றி தங்கித் திகழும் தோள்களையுடைய அரசர், வாசனை அமைந்த தம் மாலைகள் அசையவும் கிரீடங்கள் பிரகாசிக்கவும், வெண்சங்கும் காலை முரசும் கலந்து ஒலிக்கவும் சுயம்வர மண்டபம் வந்து சேர்ந்தார்.

மன்றலந்தார் மன்னர் நடுவணைய வந்திருந்தான்
கன்று குதட்டிய கார்நீல— முன்றிற்
குறுவிழிக்கு நேர்நாடன் கோதைபெருங் கண்ணின்
சிறுவிழிக்கு நோற்றிருந்த சேய். 117.

பதப்பிரிவு:—மன்றல் அம் தார் மன்னர் நடு அணைய வந்து இருந்தான் கன்று குதட்டிய கார் நீலம் முன்றில் குறு விழிக்கு நேர்நாடன் கோதை பெரும் கண்ணின் சிறு விழிக்கு நோற்று இருந்த சேய்.

அன்வயம்:—கன்று குதட்டிய கார்நீலம் முன்றில் குறுவிழிக்கு நேர்நாடன் கோதை பெருங் கண்ணின் சிறுவிழிக்கு நோற்று இருந்தசேய், மன்றல் அம்தார் மன்னர் நடு அணைய வந்து இருந்தான்.

பதவுரை.

கன்று - பசுவின் கன்றுகள்
குதட்டிய - மென்று உமிழ்ந்த
கார் - கருமையாகிய
நீலம் - நீலோற்பல மலர்கள்
முன்றில் - (இடையர்களது) முற்றத்தின்
சிறு - சிறிய
விழிக்கு - கண்களுக்கு
நேர் - நேரான
நாடன் - விதர்ப்ப நாட்டையுடைய பீமராஜனது
கோதை - மகளினது
பெரும் - பெரிய
கண்ணின் - கண்களின்
சிறுவிழிக்கு - கோடியின் பார்வையைப் பெறுவதற்கு
நோற்று - தவம்செய்து
இருந்த - இருந்த
சேய் - நளன்,
மன்றல் - வாசனை கமழும்
அம் - அழகிய
தார் - பூமாலையணிந்த
மன்னர் - அரசர்களுக்கு
நடு - நடுவிலே
அணைய - நெருங்கி
வந்து - வந்து
இருந்தான் - இருந்தான்.

விரிவுரை:—தமயந்தியின் கடைக்கண் பார்வை தன் மேல் படுவதற்குவேண்டிய தவத்தைச்செய்திருந்த நளன் மற்றவர்களுக்கிடையே சுயம்வர மண்டபத்தின்கண் அமர்ந்திருந்தான் என்பது இச்செய்யுளின் பொருள். தமயந்தி என்பதற்குப்பதிலாக அவளை விதர்ப்பதேசமன்னனது மகள் எனக் கவி குறிக்கின்றார். அத்தேசத்தையும் விதர்ப்பநாடு என்று அதன் பேரால் அழைக்காயல், கன்றுகள் மென்றுமிழ்ந்த நீலமலர்கள் இடையர்களது வீட்டின் முற்றத்தின் கண்களுக்கு நேராக இருக்கப்பெற்ற நாடன் எனக் காட்டுகின்றார். நீலமலர் எப்பொழுதும் கண்ணிற்கு உவமையாய்க் கூறப்படும் மலர். இவை முற்றங்களிற் கிடப்பதால் அவ்விடத்திற்கும் கண்ணுளதோ என்று எண்ணும்படி இருக்கும். கன்று குதட்டியதால் அது குழைந்திருக்கும் காரணம்பற்றிக் குறுவிழி என்றார்.

நித்திலத்திற் பொற்றோடு நீலமணித் தோடாக
மைத்தடங்கண் செல்ல வபவேந்தர்—சித்த
மருங்கே வரவண்டின் பந்தர்க்கீழ் வந்தா
ளருங்கேழ் மணிப்பூ ணணங்கு. 118.

பொழிப்புரை:—கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டு வருவதால் அக்கடைக்கண் ஒளிபட்டுத் தன் காதணிந்த முத்துத்தோடும் நீலத்தோடுபோல் தோன்றவும், அரசர்களது மனமெல்லாம் இவளைத் தொடர்ந்து வரவும், மாலையின்கண் உள்ள தேனுக்கு வந்த வண்டுகள் பந்தலிட்டுப் பறக்கவும், ஒளிபொருந்திய இரத்தினபரணங்கள் அணிந்த தமயந்தி அம்மண்டபத்துள் வந்தாள்.

பேதை மடமயிலைச் சூழும் பிணைமான்போல்
கோதை மடமானைக் கொண்டணைந்த—மாதர்
மருங்கின் வெளிவழியே மன்னவர்கண் புக்கு
நெருங்கினவே மேன்மே னிறைந்து. 119.

கருத்து:—வந்த தமயந்தியை அவள் தோழிமார்கள் சூழ்ந்திருந்ததால், அவளைப் பார்ப்பதற்கு அவாவுற்ற அரசர்கள் அம்மாதரின் ஒடுங்கிய இடுப்புகளுக்கு இடையே எற்பட்ட வழியூடு தம் பார்வையை நெருங்கிச் செலுத்தினர்கள்.

திருவள்ளுவர் நூல் நயம்

R. P. சேதுப்பிள்ளை, B.A., B.L., எழுதியது.

திருவள்ளுவர் பெருமை, நூலின் சிறப்பு, அறம், அரசியல் முறை, இன்ப இயல், உவமைத்திறம், திருவள்ளுவரும் பரிமேலழகரும் என்னும் அத்தியாயங்களைக் கொண்ட வோர் சிறந்த ஆராய்ச்சி நூல். கலிகோ கட்டடம் ரூ. 1-8-0. சாதா ரூ 1-0-0. வேண்டுவோர் கலாநிலயம் புரசை, சென்னை என்ற விலாசத்திற்கு எழுதவும்.

வெற்றியெனும் குதர்க்கம்.

(The fallacy of success, by G K Chesterton.)

இந்நாளில் ஒரு பிரத்தியேக வகுப்பைச்சேர்ந்த புத்தகங்களும் பத்திரிகைகளும் பல வெளியாகி வருகின்றன. மனிதன் அறிந்த நூல்களுக்குள் சிறுமையிற் பெரியன அவையே என்பது எனது அபிப்பிராயம். வீரச்செயல் கூறும் பொய்க்கதையின் விந்தையினும் (Wild romances of chivalry) பன்மடங்கு பெரியவை அப்புத்தகங்களாகும். சுவை சிறிதுமற்ற தாய் மதப்பிணக்கு விளைத்து வைக்கும் வியாசத்திலும்(dullest religious tract)பன்மடங்கு சுவையற்றவை இவ்வெற்றி விளம்பும் வியாசங்களே. வீரச்சுவை நிறைந்தகதை வீரத்தைப்பற்றியாவது கூறும். மதப்பிணக்கு நூல் மதத்தைப்பற்றியாவது சில சொல்லும் ஆனல் நான் மேலே கூறியவைகளோ சொல்வது எதைப்பற்றி என்பது யாருக்கும் விளங்காது. அவை வெற்றி என்றழைக்கப்படும் ஒன்றைப்பற்றிக் கூறும் புத்தகங்களாம். நாம் காணும் புத்தகக்கடை ஒவ்வொன்றிலும், பத்திரிகை விற்குமிடங்கள் தோறும், 'சனங்கள் வாழ்க்கையில் வெற்றிபெறுவது எப்படி' என்பதைப் போதிப்பதாகக் கூறும் புத்தகக் குவியல்களே கண்களில் படுகின்றன. மனிதனொருவன் மேற்கொண்ட காரியமனைத்திலும் வெற்றிபெற வழிகாட்டுமாம் அக்காகிதக் கட்டுகள். ஆனல் அவைகளை ஆக்கியவர்களோ புத்தகம் எழுநுதலிலும் தேர்ச்சிபெற்றிராப் பேதைகள். அவர்கள் வெற்றிக்கு வழிகாட்ட முன்வந்தது வம்பே.

வாய்மையே நோக்குமிடத்து வெற்றியென்ற தொன்று இல்லவே யில்லை. வேறு விதமாய்க் கூறுமிடத்து வெற்றி யில்லாதது என்பது ஒன்றுமே யில்லை. வெற்றி யுடையது இது, என்று கூறுங்கால் ஏற்படும் பொருளும் அது இருக்கிறது என்பதே. இருக்கிறது எதுவும் வெற்றியோடு கூடியதே. கோடீச்வரன் ஒருவன் கோடி கோடிக் கணக்குள்ள ஐச்வரியத்தைப் பெற்றவனாய் இருப்பதில் வெற்றியுடையவனாகிறான். கழுதை ஒவ்வொன்றும் அது (குதிரையாயில்லாமல்) கழுதையாயிருப்பதில்வெற்றியுடையதாகிறது. உயிருடனிருக்கும் மனிதன் அடையும் வெற்றியும் அவன் சாகாது உயிரோடிருப்பதில். செத்தவன் பெற்ற வெற்றியும் அவன் தவறாது தற்கொலை செய்துகொண்டதில் இருக்கலாம்.

இனி இப்பதத்தின் தத்துவ விசாரணையைவிடுத்து வெற்றிக்கு வழிகாட்டும் பேதைகள் கூறும் கூற்றை ஆராய்வோம். உலகத்தில், செல்வத்தையும் அதனல் மனிதன் எய்தும் சிறப்பையும் செல்வாக்கையும் பெறுதலுக்குத் துணைசெய்ய வல்லேம் என்பதே அம்மாக்கள் கழறுங் கூற்று. அதாவது வியாபாரத்திலோ, மற்றெப் பொருள் சேமிக்கும் தொழிலிலோ எவ்வண்ணம் ஒவ்வொரு மனிதனும் வெற்றிபெறலாம் என்று கற்றுவைப்பார்களாம். வீடுகட்டும்தொழில் கொண்டான் அத்தொழிலில் எப்படி வெற்றிபெறலாம் என்றும் ஸ்டாக்புரோக்கர்(Stock broker) அத்தொழிலில் பொருளீட்டலாம் என்றும் சொல்லித் தருவதாக அந்நூலாசிரியப் பெருமக்கள் கூறுகிறார்கள். நீ பலசரக்கு வியாபாரியா யிருந்தால் 'எப்படி நீ சீக்கிரத்தில் மாலையில் வேடிக்கையாய் சிறுபடகுகளில் சென்று மனங்களிக்கத்தக்க பணக்காரனாகிப் பல படகுகளுக்குச் சொந்தக்காரனாகலாம். நீ சாதாரண எழுதும் தொழிலைக் கொண்டவனா யிருந்தால்(tenth rate Journalist)எப்படிச் சீக்கிரத்தில் பிரபு(Peer)ஆகலாம். ஜெர்மன் நாட்டு யூதனாய ஒருவன் எப்படி ஆங்கிலோ சாக்ஸன் (Anglo Saxon) ஆகலாம்" என்றும சொல்லித் தருவதாகக் கூறுவார்கள் அவ்வெற்றிப் புலவர்கள். இன்னவை அவர்கள் கூற்று. இப்புத்தகங்களை வாங்கி யுள்ளவர்களுக்குவிலைப்பணத்தைக் திருப்பிவாங்க உரிமை யுண்டு. மின்சாரத்தைப் பற்றி (Electricity) ஒரு வார்த்தையும் கூறாத புத்தகத்தை மின்சார விளக்கமென்று கூறி வெளியிட எவனும் துணியமாட்டான். செடியின் அடியா நுனியா பூமிக்குள் இருப்பது என்பதுணரா ஒருவன் தாவரசாஸ்திரம் எழுதத் துணியமாட்டான். அங்ஙனமிருக்க இந்நாளில் பொருளும் சொல்நயமும் இல்லாத வார்த்தைகளைக் கொண்ட வெற்றிப்புத்தகங்கள் ஈசலெனக் கிளம்பிப் பரவுகின்றன.

வயிறுபிழைக்க மனிதன் மேற்கொள்ளும் தொழில்களில் கல்லறுப்பதாகட்டும், புத்தகம் எழுதுவதாகட்டும் மனிதன் அவைகளில் சிறப்புற, அதாவது, வெற்றிபெற இரண்டு வழிகள்தான் இருக்கின்றன. கொண்ட வேலையைக் கருத்துடன் செவ்வனே செய்வதொன்று. ஏமாற்றுவது மற்றொன்று. இவ்விருவழிகளும் சாதாரணமானவையே; புத்தகங்கள் கூறிவைக்க வேண்டிய அவ்வளவு தான விஷயமல்ல. நீ உயர உயரத் தாண்டும் (High Jump) உனது வல்லமையைக் காட்டப் புகுந்தகாலை மற்ற எவனையும்விட அதிக உயரம் தாண்டு. முடியாவிட்டால் அதிக உயரம் தாண்டியதாகப் பாவனைசெய்து பிறரை ஏமாற்றிவிடு சீட்டாடுகையில் திறமையுடன் மற்றவர்களைக் காட்டிலும் நன்றாகவாவது ஆடு, அல்லது அடையாளம் முதுகிலே செய்துள்ள சீட்டுக்கட்டை வைத்துக்கொண்டு ஆட்டத்தில் வெற்றியைப் பெறு. இவை தவிர வேறு வழி யேது?

நிற்க, உயரம் தாண்டுவதற்கும், பிரிட்ஜ் ஆடுவதற்கும் விதிகள் சில கூறித் துணைசெய்யும் புத்தகமொன்றை நீ ஒருக்கால் விரும்பினாலும் விரும்பலாம். அல்லது சீட்டாட்டத்தில் எதிராளியை மோசம்செய்து வெற்றி பெற வழிகாட்டும் புத்தகத்தையும் ஒருவேளை விரும்பலாம். ஆனல் 'வெற்றி' என்பதைப் பற்றிய புத்தகம் உனக்கு வேண்டவே வேண்டா! நீ விரும்பவு மாட்டாய். நீ சீட்டாடவும் தாண்டவும் விரும்பலாம். ஆனல் 'தாண்டுதல் தாண்டுதலே' 'விளையாட்டில் ஜெயித்தவன் வெற்றி யடைகின்றான்' என்று சொல்லும் வெறும் வார்த்தைகளை நீ படிக்க விரும்பமாட்டாய். மேலும், வெற்றிக்கு வழிகாட்டியாவார் தாண்டுவதைப் பற்றி எழுவதும் இவ்வாறு.

"தாண்டுபவன் தான் செய்யப் போகும் கருமத்தைத் தெளிய வேண்டும். மற்றவர்களைக் காட்டிலும் அதிக உயரம் தாண்டத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். மனக் கலவரம் ஏற்படக் கூடாது. தாண்டி விடுவோம் என்னும் நம்பிக்கை வேண்டும். எதிராளி யாராயிருப்பினும் போட்டி போட்டிதான். டார்வின் காட்டியபடி 'வலியவன் முன்னுக்கும் எளியவன் பின்னுக்கும் போக வேண்டியதுதான்' என்னும் வாய்மையை மனத் திருத்திக் கொள்ளவேண்டும்."

இவ்வளவுதான் அவர்கள் கூறுவதும். தாண்டவிருக்கும் ஒரு சிறுவனிடம் இவ்வார்த்தைகளை மெள்ளவும், அழுத்தமாயும் கூறினல் அவனுக்கு இது உபயோகமாயிருப்பது போல் தோன்றலாம். வெற்றிப் புலவர்மனம் சீட்டாட்ட விசாரணையில் புகுங்காலை அவர் கூறுவதும் இதுவேயாகும்.

"சீட்டாடுகையில் எதிராளி ஜெயம்பெறாது பார்த்துக்கொள்ள வேண்டும். புத்திநுட்பமும், சமயத்தை விடாது பிடித்துக்கொள்ளும் திறமையும் வேண்டும். ஜெயிக்கவே போகிறேன் என்ற நம்பிக்கை குன்றலாகாது. மூட நம்பிக்கை இக்காலம் மலையேறிவிட்டது. சாஸ்திர ஆராய்ச்சி பெருகிவரும் காலத்தில் நாம் வாழ்கிறோம். பந்தய விளையாட்டில் ஒருவன் தோல்வியுற்றால் மற்றவன் வெற்றியடைகிறான் என்பது இந்நாளில் முடிவாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது."

(தொடரும்)

K. இராஜகோபாலன்.

189005

மலர்வனம்.

பாம்பு பாம்பு.

“பைங்கிளி பூவை என்னும் மாண்பிலாதாரை வைத்தார் என்னுஞர்” என்று கிளியினுல் தனக்கெந் நாளும் எவ்வமே நேர்வதென்பாள்போல் நக்கனன் இலக்கணை. ஈலுகமிகு சொற்களிலெல்லாம் பொய்சில மெய்சில கலந்திருப்ப தியற்கையேபோல் இங்கிவள் உரைத்ததுவும் ஒருவகையில் உண்மையாயும் மறுவகையி லன்ருகவும் இருக்கின்றது. சீவகனே டுடற்கவள் தேடியதுபோன்றே அது தீர்தற்கும் தேர்ந்த பொய்யொன்றிவ்வுரை. தனதிருவிழி முடியக் கண்டறியா மனையாளின் அழகினைச் சீவகன் இமைத்தலுமின்றி எல்லையைக் காணுமா நோக்கியதால் அவன்கண்கள் கரிந்து நீர் சொரிந்தன. இதனைக் கண்ட இலக்கணை, சேர்ந்துடனிருக்கும் தன்னை அவன் மனத்தால் துறந்து பிரிந்திருப்பான் மற்ருெருத்தி யாரையோ உன்னி அழுகின்ருன் எனவோர் பொய் நிமித்தம் வலிந்து கற்பித்துக் கொண்டனளாய்த் தன் கண் தீச்சிந்த ஊடி அகன்றனள். எதிர்பாரா இவ்வேதனைக் குடைந்த செம்மல், “பண்டு யான் செய்த பாவப் பயத்தை யார்க்குரைப்பேன்” எனக் கதறி அவள் மலர்ப்பத மிறைஞ்சி, வண்டையும் தேனையும் விளித்து அன்னுளடிவருடி. இவ்வூடலைத் தணித்தருள வேண்டினன். இதனைக் கண்டன இலக்கணை வளர்த்த பூவையும் கிளியும். கண்ட அவை சீவகன் நிலைக்கிரங்கி இனைகா இவள் வன்னெஞ்சைக் கடிந்துபேசின. அந்தக் காலையில், தன்னலம் முன்னேவைத்துத் தருமத்தைப் பின்னே பேசுவதே இவ்வுலகிற்கு ஏற்றமுறை என்னும் தத்துவச் சூழ்ச்சியில் முதிர்ந்தவோர் நாகணவாய்ப் புள் கிளியைப் பார்த்து, “அவள் அளிக்கும் கூழே கதியாக இக்கூட்டினில் அடைபட்டுக் கிடக்கின்ருேம். புருடனும் மனைவியும் தம்முள் சிறிது பூசல் கொண்டனராயின், நாம் அதனுள் தலையிடுவது தகுதியல்ல. இவளுக்கு இத்தர்மமெல்லாம் இப்பொழுது எடுத்துச்சொன்ஞல் இனி மூன்றுநாள் நம்கண்ணில் சோறென்பது காட்டமாட்டாள். ஆதலால், ஓய் தத்தையீரே, உம் வாயைப் பொத்திக்கொண்டு கிடவும்” என்று சொல்லித் தந்தது.

பூவையாருக்குப் புத்தி அதிகமா யிருக்கலாம். தத்தையாருக்கோ தருமமே பெரிது. வாய்மையைக் கருதியதேயன்றி அது தன் வயிற்றை நினைக்கவில்லை. ஆதலால், “பெற்றதாயே யாயினும் என்ன. இவ்வநீதியைக் காணச் சகியேன். இந்நூலிலே சுருக்கிட்டுச் சாவதே நலம்” என விளம்பி அப்பேடைக்கிளி சொன்னவாறு செய்யப்புகவே இலக்கணை சிரித்துவிட்டாள். ஊடலின் பதம் பார்த்திருந்த சீவகன், ‘வாழி, வரம்பெற்றேன்,’ எனக் கிளியை வாழ்த்தி, வாய்த்த இவ்வமயத்தை வாளாவிடாமல் அவளைப் புகழ்புனைந்து பாராட்டத் தொடங்கினன். இல்லாச்சினம் இன்னும் இருப்பதுபோல் அவள் நடித்த கபடத்தை நகையூட்டி, இருவரும் அவாவிய முடிவு அவ்வூடலிற்கு எய்துவித்த இக்கிளி செய்த உதவியின் அருமை அளவிடற்பாலதன்று. தன்னலந் தள்ளித் தருமமே பார்த்த அதன் குணமும் அருமையானது. இருப்பினும் தன்னைச் சிரிக்க வைத்துப் புலவியற் தோற்பித்த கோபத்தாலும், தந்திரமாய்த் தன் நகைப்பை மாற்றுதற்குநினைத்ததாலும், குலவிவரும் நாயகனை நொய்தினகற்றி, “வீண்பாட்டுப் பாடி யென்னை வசியப்படுத்தி விடலாமென்று எண்ண வேண்டா. கிளியும் பூவையும் என்ற இவ்வற்ப குணமுடைய சந்துக்களை வைத்து வளர்த்தவர் அவமானத்திற் காளாவது வியப்பன்றே” எனத் தன் புருவக்கடையை நெற்றியிலேற்ற முயன்றனள் அக்காரிகை. எனினும் அது இயன்றிலது.

இலக்கணை வளர்த்த கிளி மாண்பிலது மன்று; அதனுல் அவள் ஏதமும் அடைந்திலள். எனினும் வேறுசில கிளிகள் கவிகளின் வாயாற்கூவித் தமை வளர்த்த தையலார் நாணித் தலைகுனியுமாறு செய்துள்ளன. நண்பர்காள், இவ்வனத்தூடு வம்மின், அன்ன நிலை யொன்றிரண்டு அருமையிற் காண்போம்.

தேவர்பால் தந்தவுரை தவறப்படாதென்ற வாய்மையால், தனதின்னுயிரினு முயர்ந்த தையலாளை அவர் தமுளொருவர்க்கு மணமாலை சூட்டென்று தூதியம்ப இணங்கினனுய் நிடதர் கோமான், விதர்ப்பன் வளாகரெய்தி மாலிகாஞ்சன மந்திரச் சக்திகொண்டு, அழகினுல் மாத்திரமன்றி அனங்கன் என்பதற்கு ஐயமில்லாவகை உருவமும் கரந்து, சோலைநின் றகன்று தோழியர் புடைசூழத் தன்கோயிலுள் ஏகுமத் தமயந்தியைத் தொடர்ந்த காலையில், அங்குக் கூட்டினில் நான்றவோர் கிள்ளை, “மண்டமர் கடந்தவேல் நளன் வந்தான், மண்டமர் கடந்தவேல் நளன் வந்தான்” என ஆரவாரஞ் செய்தது. மந்திரம் பொய்த்ததோ, கண்டதோ இக்கிளி தன்னை என்று நளன் அலமந்தா னெனினும், உண்மை யது வன்று. கிள்ளை இவ்வாறு கூவியதன் காரணம் தோழியர் அறிவர். அறிந்து விலாஇறச் சிரித்துத் தமயந்தியை அசதியாடினர். அவளுற்ற வெட்கத்திற்கோ அளவில்லை. இச்செய்தியை,

> மண்டமர் கடந்தவே னளன்வந் தாளெனத்
> தொண்டைவாய் மடந்தையர் நாளுஞ் சொல்வன
> பண்டரு மொழிக்கிளி பயின்று கூறலும்
> கண்டதோ விஃதெனக் காளை யெண்ணினுன்.

[‘நெருங்கிவரும் போரெலாம் வென்ற வேலாயுதத்தையுடைய நளன் வந்துவிட்டான்’ என்று, கொவ்வைக் கனிபோன்ற வாயுடைய தோழிமார்கள் தமயந்தியைப் பரிகசித்தவராய் எப்பொழுதும் சொல்லிக் கொண்டிருப்பதைக் கேட்டுப் பழகிப் பழகி இப்பொழுது இசையின் இனிமைவாய்ந்த மொழி பேசும் கிளி தானும் அதனைச் சொல்லவே, ‘இது என்னைப் பார்த்துவிட்டதோ’ வென நளன் எண்ணினுன்]

என்று அதிவீரராம பாண்டியன் நைடதத்துள்ளே பாடியிருக்கக் காண்போம். மணத்திற்கிருக்கும் பெண்ணைத் தோழியர் “உனக்கு நாயகனுவான் இதோ வருகின்ருன் காண்” எனச் சொல்லிச் சொல்லி அசதியாடும் இயல்பிற்கிணங்க இவளது தோழியரும் கூறி வந்ததைப் பழகியே இக்கிள்ளையும் கூறிற்று. இதனை ஆதாரமாகக் கொண்டு நண்பினில் மிக்க அம்மங்கையர், “தமயந்தி, நினதுள்ளம் எந்நாளும் நளனையே நாடி நிற்கின்றதென்பதை எம்மிடத்து ஒளித்து வைத்தாலும், இக்கிள்ளையும் அதனை அறிந்தது காண்” என அவள் வெள்கிப் போக மேன்மேலும் பரிகசத்துட் புகுந்திருப்பர். அச்சமயம் நளனே இக்காட்சிக்குக் கரியாய் அங்கு நிற்பதும் தெரிவாளாயின் அவள் மானம் என்னும்.

சொன்னதைச் சொல்லுங் குணத்தால் இக்கிளி பொருளுணராமற் புகன்றதோ, அல்லது தெரிந்தே பரிகசஞ் செய்ய எண்ணியதோ அறிந்திலம் எனினும் வேறு ஓர் கிள்ளை தன் சொல்லின் பொருளும் பயனுந் தெரிந்து, இலக்கணை வளர்த்த கிளிபோன்றே, சிந்தாமணியில் பேசியுள்ளது. ஆனுல் சுயநயம் இதன் நோக்கம். கிளியைக் கரையில் வைத்து நீராடி இருந்த வொருத்தியைப் பசிக்காற்ரு அக்கிளி வந்திடுமாறு செய்த தந்திரமொன்று திருத்தக்க தேவர் காட்டுவர்:—

> தீம்பாற் பசியி னிருந்த
> செவ்வாய்ச் சிறுபைங் கிளிதன்
> ஓம்பு தாய்நீர் குடைய
> ஒழிக்கும் வண்ண நாடிப்
> பாம்பா லென்ன வெருவிப்
> பைம்பொற் ருேடு கழலக்
> காம்பேர் தோளி நடுங்கிக்
> கரைசேர் பவளைக் காண்மின்.

[தித்திக்கும் பாலிற்குப் பசித்திருந்த ஒரு சிவந்த வாயுடைய பசுங்கிளி, தன்னைவளர்க்கும் தாய் நெடுநேரம் நீராடிக்கொண்டிருந்ததனை விலக்க எண்ணிப், “பாம்பு பாம்பு” என்று கூவ, மூங்கில்போன்ற அழகிய தோள்களையுடைய அவள் பயந்து, பசும்பொன்தோடு கழன்று நழுவ நடுநடுங்கிக் கரைசேர்பவளைப் பாருங்கள்]

கலவிக்களி மயக்கத்தே தலைவியுங் கொழுநனுங் குலவிக்கலந்த மொழியெல்லாம் கேட்டிருந்த ஓர் கிளி பிற்பகல் அதனைப் பல்லோறறிய விளம்பிச்செய்த சதியை என் சொல்வது.

(தொடரும்) “மதுக்ரம்.”

இலக்கிய ஏற்ற ஆராய்ச்சி.

(413-வது பக்கத் தொடர்ச்சி.)

சிறப்பு முறைகள்.

iii புறப்பொருள்.

* புறப்பொருளாவது . புறத்தே அறனும் பொருளும் பற்றி நிகழும் ஒழுக்கமாகிய பொருள். நமதிலக்கணங்கள் பண்டைக்காலத்திலிருந்த அரசர், பகைவருடன் நடாத்திய யுத்த முறைகளையே இதில் பெரும்பாலும் விளக்கி வழங்கும் தொல்காப்பியப் புறத்திணையியலில் காணப்பட்டனவே பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை முதலிய புறப்பொருள் இலக்கணங்களிலும் பெரும்பாலும் காணப்படும் விடயங்கள். அவை பகைவருடைய பசுக்களைக் கவர்தல், கவர்ந்த பசுக்களை மீட்டல், பகைவர் நாட்டைக் கொள்ளப் போர் செய்வதற்கு மேற்செல்லல், அங்ஙனம் போர் செய்வதற்கு வந்த பகைவருக்கு எதிர் சென்று ஊன்றுதல், தம்மதிலைக் காத்தல், பகைவர் மதிலை வளைத்துக் கொள்ளுதல், பகைவரோடு போர்செய்தல் வெல்லுதல் என்பனவே புறப்பொருளுக்கு மூலாதாரமானவை. இவற்றை அவ்வக் காலத்தில் அவ்வத் தொழிலைக் குறித்து யுத்த வீரர் அணியும் பூக்களால் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, என எட்டுத் † திணைகளென்பர். இவ்வெட்டுத் திணைகளிலும் பற்பல துறைகளுள. இவற்றில் வெட்சியைக் குறிஞ்சியென்றும், வஞ்சியை முல்லை என்றும், உழிஞையை மருதமென்றும், தும்பையை நெய்தலென்றும், வாகையைப் பாலை என்றும், இவ்வைந்தும் அகத்திணைகளின் புறனென்பார் தொல்காப்பியர். இதன்றியும் கைக்கிளையின் புறனுகக் கூறப்படும் பாடாண்டிணையும், கைக்கிளைத்திணை, பெருந்திணை இவற்றையும் சேர்த்துப் பன்னிரண்டு படலங்களாகப் புறப்பொருள் வெண்பாமாலை இயற்றப்பட்டது. பாடாண்டிணையாவது யுத்த வீரனுடைய கீர்த்தி, வலி, கொடை, தண்ணளி முதலியவற்றை ஆராய்ந்து சொல்லுதல். இதில் அரசன் பகையற்று அரசாளும் அரசியல் இலக்கணத்தை நாற்பத்தேழு துறைகளில் விளக்கும்.

புறப்பொருள்களை விளக்கும் நூல்கள் பல தமிழில் உள. அவற்றில் முதன்மையாய் எடுத்துக் காட்டியவை பெருங் * காப்பியங்களும் சிறு † காப்பியங்களுமே. ஏனெனில் இவற்றின் அங்கங்களாயுள்ள சில படலங்கள் புறப்பொருள்களை விளக்காவிடின் காவிய இலக்கணம் கெட்டுப்போம்.

கி. பி. பதினேராம் நூற்றூண்டுக்குப் பின்னர்த் தமிழரசர் போரைப் பற்றியாகிலும், அரசியலைப்பற்றியாகிலும் எழுதும் கவிவாணர்களும் நூல்களும் அரியவாயின. சயங்கொண்டான் கலிங்கத்துப் பரணியே தமிழரசர் போர்வெற்றியைப் பற்றி எழுதிய நூல்களில் கடையதெனக் காட்டக் கூடியது. பன்னிரண்டாம் நூற்றூண்டுக்குப் பின்னர்த் தமிழ்நாடு சில நூற்றூண்டுகளாய் இலக்கிய மற்றிருந்தது. மகமதியர்கள் மகராட்டியர் முதலியோர் படைஎடுத்து வந்ததாலும், உள்

* அகம்—(Psychological world) திருக்கு
புறம்—(Material concrete world) நிரிசயம்.

அகம் நிருக்கைப்பற்றிய தென்றும், புறம் நிரிசயத்தைப் பற்றியதென்றும் வேதாந்திகள் மொழிவர். “அகப்புற ஆராய்ச்சி விளக்கத்தைக் காண்க.”

† வெட்சி நிரைகவர்தல், மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேற் செல்வது வஞ்சியா—முட்கா
தெதிரூன்றல் காஞ்சி யெயில்காத்த னொச்சி
அதுவளைத்த லாகுமுழிஞை— அதிரப்
பொருவதுதும்பையாம் போர்க்களத்து மிக்கோர்
செருவென்றது வாகையாம்.
—பன்னிருபடலம்

* பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொரு ளிவற்றினென்று
ஏற்புடைத் தாகி முன்வர வியன்று
—நாற்பொருள்.

† அறமுத னான்கினும் குறைபாடுடையது
காப்பிய மென்று கருதப்படுமே.
—தண்டியலங்காரம்.

நாற்பொருள் பயக்கும் நடைநெறித்தாகி,
தன்னிகரில்லாத் தலைவனை யுடைத்தாய்,
மலைகடனுடு, வள நகர் பருவம்,
இருசுடர் தோற்றம், என்று இனையன புனைந்து
நன்மணம் புணர்தல், பொன்முடி கவித்தல்,
பூம் மொழிலுகர்தல், புனல் விளையாடல்,
தேம் பிழிமதுக்களி சிறுவரைப் பெறுதல்,
புலவியிற் புலத்தல், கலவியிற் களித்தலென்
றின்னன புனைந்த நன்னடைத்தாகி;
மந்திரம்தூது செலவிகல் வென்றி
சந்தியிற்ருெடர்ந்து, சருக்கமிலம்பகம்
பரிச்சேத மென்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்ருேர்புனையும் பெற்றிய தென்ப.
—தண்டியலங்காரம்.

னூரில் அரசியல் தலையற் றிருந்ததாலும், புறப்பொருள் இலக்கண நிலை மாறலாயிற்று. பின்னர்ப் பரதேசத்தார் அரசாட்சிக்கு உட்பட்டதும் தமிழ் நாட்டில் புறப் பொருள் அங்கங்களாகக் கூறப்பட்ட எத்துறைக்கும் உதாரணம் இயற்கையி லின்மையாய் முடிந்தது. எனெனில், முற்காலத்திய போர்வகைகள் வெட்சி முதலியன மகம்மதியர் காலத்திலும் மகராட்டியர் யுத்தத்திலும் நடந்தவையல்ல. சுத்தவீர இலக்கணமான தமிழர் காலத்திய யுத்த இல்க்ஷணம் மாறிக் கள்ளப்போரும், வீரமற்று மறைந்து சண்டையிடுதலும், மோசத்தால் பகைவனை வெல்லலும் நிறைய ஆரம்பித்தன. அத்தகைய போரே, ஜர்மனியார் (Germans) ஐரோப்பிய யுத்தத்தில் மறைந்து சுரங்கத்திலிருந்து சண்டை போடுதல், கள்ளத்தனமாய் மின்சார யந்திரங்களைப் பகைவர் மீது விடுதல், பாஷாணக் காற்றுகளை ஏவல் முதலிய துறைகளை உடைத்தாயின. இத்தகைய வீரமற்ற மாயப்போர், புறப்பொருள் இலக்கணத்தில்பொருந்தாதலால், அதற்கு ஒரு இலக்கியம் அமைய யோக்கியதையில்லை.

தமிழ் அரசியலோ, செங்கோன் மன்னன் ஒருவன் செய்யும் ஆட்சி. இப்போது ஒருவன் அரசாட்சி என்பது அற்றுப்போயிற்று. தற்கால நாகரிகத்திற்கு ஒத்தது குடி அரசு. மன்னவன் என்னும் பெயருடையவன் தன்னிச்சையாய் யாதொன்றும் செய்யத் தற்காலத்தில் சக்தியற்றவனா யிருப்பதால், அவன்கோல் செங்கோல் கொடுங்கோல் என்ற இரண்டும் வகிக்க ஏலாது. ஆதலால் யுத்தகாலத்திலும் யுத்தமற்ற காலத்திலும் உள்ள நிலையைப் புறப்பொருள் வகையில் காட்டத் தற்கால இலக்கியத்திற்கு யாதொரு சந்தர்ப்பமும்இல்லை. எனவே புறப்பொருளே, இனிஎழுதும் நூல்களுக்குப் பழைய தெனக் கழித்தற்பாற்றும்.

iv. நூதன நாகரிகத்தின் பொருள் இலக்கணம்.

மேற்கூறியுள்ளவாறு, அகப்பொருளில் களவியல் கந்தர்வத்துடன் அற்றுப்போனதென்றும், அகப்பொருள் வாயிலாகப் பேரின்பத்தைக்குறித்து உருவகமாய் நஞ்சமயாச்சாரிகள் பாடினர்களென்றும், அகப்பொருள் நவநீதம், அவ்வாறு வெளிவந்ததென்றும் முன்னர்க் கண்டுள்ளோம். புறப்பொருள் இலக்கணம் சுதேச ஆட்சி நிலைகுலைந்ததே உருவற்றதென்றும் பின்னர்க் கண்டோம். ஆகையால் தமிழ்ச் செங்கோல் அரசியல் நடந்த இடத்தில் குடி அரசியல் நடப்பதில் பழைய இலக்கணத்தில் தற்காலத்தில் ஒவ்வாததைக் கழித்து ஒவ்வுவன பிணைக்கலாகாவோ? யுத்தமென்பது மனிதருள் ளொருவரை ஒருவர் வெல்லுதலும் கொல்லுதலுமேயன்று. இயற்கையிலுள்ள பலவித சக்திகளையும் மனிதன் தன் ஆட்சிக்கு வரும் வண்ணம் இயற்கைத் தத்துவ சாஸ்திரம் ஆராய்ச்சிகள் வாயிலாய், யந்திரங்கள் முதலியன செய்து அடக்கலாகாத மகாவியற்கைச் சக்திகளையும் அடக்கி, மனிதன் அவற்றைத் தன் வசமாக்குதல், அவற்றிற்குத் துணையான பல தொழில்கள், இவை யாவும் பெரும்போரன்றோ? மின்சாரங்களை அமிதசக்தியுடன் உற்பத்தி செய்தல், அவற்றின் வாயிலாய் இடம் பொருள் ஏவல் குறையறச் செய்வித்தல், அணுக்களை உடைத்துப் பரமாணுக்களிடத்தில் செல்லுதல், பல லோகங்களையும் வேதித்தல் இத்தகைய இயற்கை என்னும் பெருந்தேவியுடன் மனிதன் வியஷ்டியிலும் சமஷ்டியிலும் யுத்தம் புரிந்து வாகை சூடுவது *என் புலவர்கள் பாடலாகாதோ? கலிங்கத்துப் பரணி பாடியதுபோல் பேசுங் கருவிகளாகிய (Gramophone) யந்திரங்களும் தந்திக் கம்பியின்றி அடிக்கக்கூடிய தந்திகளும் (wireless) அதன் யந்திரங்களும் செய்த பெரும் புலிகளைப் புகழக் கவிவாணர் இன்னும் வெளிவரவில்லையே! இத்தகைய இலக்கியங்களே, அப்பெருந்தகைகள் சிறப்பைக்காட்டக் கூடுமாதலால் அவையே இருபத்தோராவது நூற்றாண்டில் குற்றமற்ற புறப்பொருள் துறைகளாய் விளங்கக் கூடியன.

---

* நாற்குலப் பக்கமுக் காலங்களவழி நல்குரவை
யாற்றல் வல்லாண்வேட்கை யார் பக்கமேன்மை
[யரும் பொருளே
தோற்றியகாவல் துறவுகொடைபடை யாளர் பக்கம்
மாற்றிய வொற்றுமை யோடுமற்றும் மிவை
[வாகையிலே.

வீரசோழியம் - பொருட்படலம் 10.

E. T. சொக்கம்மாள்.

குறிப்பு:—இக்கட்டுரையின் ஆசிரியர் இங்குக் கூறுகின்ற கொள்கையை நாம ஏற்றுக் கொள்ள இயலாததுபற்றி வருந்துகின்றோம். பூததத்துவ சாஸ்திரப்பயிற்சி மனிதரை இயற்கையோடு ஒத்திணங்கி வாழுமாறு செய்யும் நினைவுபோக்கி, அதனோடு மாறுகொண்டியற்றிய போரினிற் பெற்ற வெற்றி எந்திரச் சாதனங்கள் என்னல் ஆகாது. அவ்வியற்கையை ஒரு 'பெருந்தேவி'யாக உருவகப்படுத்தி அப்பெண்ணோடு போர்வென்ற 'புலிகளை' என்னென்றுரைப்பது. எனினும் இவ்வுருவகம் காட்டிய முரணை நாம் பொருட்படுத்தவில்லை. கிராமபோனும் தந்திக்கம்பியும் காவியங்களுக்கு உரியனவாம் என்பதும் அவைகளைச் செய்தவர்களைப் புலவர் புகழ்ந்து கவிபாட வரவில்லை என்று இவ்வம்மையார் இரங்குவதும் எமக்கு வியப்பைத் தருகின்றன. அவை புத்தகங்க ளாகலாம். இலக்கியங்கள் என்ற பேர் அவைகளுக்கு இடுவார் இடுக, காவியங்களோ ஏழேழ் தலைமுறைக்கும் அவை ஆகா. கலையின் தோற்றமாகிய காவியத்திற்கும் பயன் கருதிச்செய்யும் எந்திரச் செயலிற்கும் வெகுதூரம்.

பயன்தான் என்ன! எமர்ஸன் சொல்கின்றபடி "நூதன எந்திரச் சாதனங்களைக் கண்டு பிடிப்பவனுக்கு மாத்திரமே அவைகளால் இலாபம் உளது என்பதையல்லால், வேறு பிறர்க்கு அவன் செய்யும் உதவி எத்தகைத்து என்பது சந்தேகத்திற்கு இடமானது." மனிதன் தனக்கு இயற்கையாய ஆன்ம சக்தியை இழக்கவிழக்க அதனிற்கு ஈடுசெய்யும் பொருட்டுச் செய்யும் முயற்சியே எந்திரங்களும் இரஸாயனச் சாதனங்களும் ஆம். காலொடிந்தவனுக்குக் கட்க தண்டமும் பார்வைகுறைந்தவனுக்கு மூக்குக்கண்ணாடியும் அழகைச் செய்தில. இவ்வுறுப்புக்களை இழந்தவர் கண்டு இரங்கலாமேயன்றிக் கட்கதண்டத்தையும் மூக்குக்கண்ணாடியையும் வைத்துக்கொண்டு புகழ இயலாது. ஆன்மசக்தியை இழவாது காக்கும் வண்ணம் சேமம்புரிவன காவியங்கள். இயற்கையோடு நம்மை ஐக்கியமாக்குவன கலைகள்.

பத்திரிகாசிரியர்.

(?) I SING BECAUSE I MUST.

சிறு பாடல்கள்.

அருட்பெருஞ் சோதிக் கொருபோது வணக்கம்.

இது "Thou Great" என்று தொடங்கும் ஓர் அங்கிலத் துணுக்கின் கருத்தைத் தழுவி இயற்றப்பட்டதாகும்.

உலகினர்க் குளநன் னலமுழு துவந்தீண்
டுதவுபே ரருட்பெரும் பிழம்பே
அலகிலாப் பெரியோய் நினதுசே யான
வடியனேற் கறிவுபே ராற்றல்
மலைவிலா நெறியிற் செலவிவை யளித்தான்
மனமகிழ்ந் துனதடி போற்றிக்
குலவிவாழ்ந் தமையக் கொடுத்தருள் யாண்டுங்
குறைவிலா நினதரு கிருப்பே.

உ.வே. சா. வேங்கடராம ஐயர்.

ரோஜா.

பூவிற் சிறந்த பூரோ ஜாவே!
பூவர சியெனும் புனித மலரே!
பாரதப் புலவர் பாக்க ளணியுறு
பாக்கிய மில்பிற சேத்திர மலரே!
வெள்ளையர் கன்னம் விளங்கிடு வண்ணம்
நினக்குரி தென்றே நினைவுறு மலரே!
வைகறை வானம் வகுக்கு வண்ணமும்
நினக்குரி தென்றே நினைவுறு மலரே!
சேற்றி லுதிக்குஞ் செந்தா மரையின்
நாற்றம் விசும்பு நகுசிறு மலரே!
முளரி மகளின் முறுவலோ வென்ன
முட்செடி முடியில் முளைக்கு மலரே!
கூர்மிகு முட்பல கூடிய செடியில்
காமுறு மெல்லிய கோதறு மலரே!
தனிநிறந் தாங்கித் தனிமணம் பெற்றுத்
துணையிணை யற்றுத் துலங்கு மலரே!
கண்குளி ரச்செயுங் கட்டழ குற்றநின்
தண்கதிர் முற்படத் தாபமும் நிற்குமோ!
பனிநீர்க் குப்பிப் பனிநீர் பொழியப்
பாரினோர் குளிரப் பண்ணிடு மலரே,
துருக்கி யரசி துகளினைப் போக்கிடு
தண்ணீர் நிரம்பத் ததும்பு மலரே!
மெல்லிய வமளியின் மேலுறக் கிடந்து
எல்லியி லின்ப மிந்திடு மலரே!
சீனிப் பாகினில் சிறப்புட னமர்ந்து
இனிய "குல்கந்த்" இயற்றிடு மலரே!
நின்னித ழாரம் நிறம்பிய மார்பினில்
எம்மல ராரமு மேற்புடைத் தாமோ!
பாரினில் மலர்கள் பற்பல வெனினும்
பாங்கிய ரெவரும் பற்றிடு மலரே!
நங்கைகள் கொண்டையை நட்புட னுடிடு
பூவிற் சிறந்த பூரோ ஜாவே!

வை. சூரியநாராயண சாஸ்திரி.

பாரிசாதகம்.

வானுல குக்கொரு வேந்தெனு மிந்திரன்
நந்தவ னத்தொரு நற்றரு வாமென
புகழ்பெற நிற்கும், பாற்கடற் பயந்த
பஞ்சத ருக்களுள் பவளக் காம்புடை
ஒளிர்புறு மிதழ்க ளோம்பிடு நறுமலர்
வையகம் விரும்ப வைகறைப் பொழுதினில்
பாத தலமதிற் பரவப் பொழியும்,
வாடாப் பவள மல்லித் தொடையணி
அரம்பை யாதிய வப்சரப் பெண்கள்
ஆரா வின்ப மாழ்ந்து நுகர்ந்து
ஆரவா ரத்துட னுடியும் பாடியும்
அமரர்கள் நோக்க வடிதனில் வதிபெறும்
அன்று கண்ண னருமை யணங்கு
உருக்கு மிணித னுள்ளம் பூத்திட
அன்னவ ரகத்தில வர்களே சொரிய
சத்திய பாமைதன் சொற்றவ றுமலே
மகிதல மறிய மாமுமே நின்ற
பரிமள கந்த பாரிசா தகமே!

வை. சூரியநாராயண சாஸ்திரி.

கவியொருவன் நமனுக் குரைத்தது.

காலா! என்பால் விரும்புத லென்னே?
நதிப்புனல் மேலே நிலவொளி துயிலத்
துஞ்சாத் தென்றல் மனமழிந் துருகி
இடருழல் பொழுதி லொருவரு மறியா
இன்சொற் பலசிற் றலைக ளியம்ப

என்னை மறந்துயா னெழுப்பிய கனவோ?
அன்பா ரொளியென் னுவிமே லமர
தன்னல மொழிந்தியான் நம்பிய கனவோ?

பேய்போ லேமரங் களியுட லசையப்
பொருமிக் காமுர வெனவே நெளியுங்
கழையின் பொருமையை யறவே பிழிந்து
சுழன்மேல் காற்றென் சுருதியே யாக

என்னினை வற்றுயா னிசைத்ததோர் பண்ணோ?
அன்பெனுங் காற்றென் னுவியாழ் பிழிந்த
துன்ப மணமவி ழின்னிசைப் பண்ணோ?

அன்பின் கனவிலே நனவென் றுனது
துன்பப் பண்ணுளே களிப்பிசை யுளது
அன்பின் கனவையு மாவியின் பண்ணையும்
நின்பா லளிப்பன் எதிரிவைக் குளவோ?

எதிரிவைக் குளவேல் நின்பா லொடுங்கி
ஏங்கி யேங்கித் துயருழ லெம்மை
மேவிநீ பொருளென அடைவது மென்னோ?

A. ஸ்ரீநிவாசராகவன்.

கம்ப ராமாயணம்

பால காண்டம்

5. திருவவதாரப் படலம்

(411-வது பக்கத் தொடர்ச்சி)

வாய்மை கண்டவர் வழக்கு விண்டவர்.

தன்னையேபோல் தாரணியைத் தன்னின்பின் தாங்குதற்கு ஓர் தநயன் இலன் என்றுரையாமல் இரந்து நின்ற மன்னர்மன்னனின் மொழிகேட்ட வசிட்டமா முனிவர், அரக்கராலுற்ற அல்லலிற் காற்று அமரர் சரண்புகுந்தபோது எம்மையாளுடைய பெம்மான் ஆதிநாள் அபயம் அளித்த வாய்மையின் வரலாற்றை ஈண்டுத் தம் மனத்தே மீண்டும் எண்ணுவாராயினார். எண்ணுங்காலை இம்முனிபுங்கவர் மனமெனும் அரங்கினில் முன்நிகழ்ந்த யாவும் முழுமையோடு முறைமையாய் நடிக்கப் பெறுகின்றன. அன்று கண்ணிற் கண்ட கவின்பெரு காட்சியை இன்று நினைவிற் கண்டனர். அன்று இருசெவி குளிரக் கேட்ட மொழிகள் இன்று அவர்தம் யாழெனும் மனதை நினைவெனும் விரலால் வருடப் பண்ணொடு கிளர்ந்தெழுந்தன. எனின் இனிவரும் செய்திகள் வசிட்டர் தம் அகத்துளே நினைத்தவைகளேயன்றி அவர், இறைஞ்சிய தயாதற்கு இயம்பிய மாற்றமன்று. கவியினது கூற்றுமன்று. எனின், "வா சரோருகன் மகன் மனத்தின் எண்ணினான்" என முடியும் செய்யுள் முதல், "ஈது முன் நிகழ்ந்தவண்ணம் என முனி இதயத்து எண்ணி" எனத் தொடங்கும் செய்யுள் வரை, இருபத்துமூன்று பாசுரங்களால், செங்கண்மால் சென்று அயோத்தியின் செல்வனாய் அவதாரம் செய்ய நேர்ந்த பரிசு யாதெனத் தெரியவருகின்றது. இதற்கு நாம் கவிவரர் காத்தைப் பற்றி முனிவரர் மனத்துள் மூழ்குதல் வேண்டும். அல்லாக்கால், அச்செய்யுள்களில் தவழும் எழுத்தினைப் பிய்த்துத் தம்வாயிலிட்டு மெல்வோர்க்கு என்தெய்வம் நின்தெய்வமென்று எதிர் வழக்கிடும் பொல்லாத பித்தந்தெளிய வகையில்லை. ஆதலின் எது முன்நிகழ்ந்த வண்ணம் என ஆராய்வோம்.

சுடுதொழி லரக்கராற் றொலைந்து வானுளோர்
கடுவமர் களனடி கலந்து கூறலும்
படுபொரு ளுணர்ந்தவப் பரமன் யாமினி
அடுவதில் லெனமறுத் தவரோ டேகினான்.

[தேவர்கள், தீச்செயலுடைய அரக்கர்களால் துன்பமுற்று, அதனை விடம்தங்கிய கழுத்தினனாகிய சிவபிரானிடத்தில் சேர்ந்து சொல்லித் தங்குறை தீர்க்குமாறு வேண்டினார். மேல்நிகழ இருக்கின்றவிஷயங்களை அறிந்த அப்பரமன், "நாம் இனி அவர்களைக் கொல்வதற்கு இல்லை." என்று மறுத்து அவர்களோடு ஏகினான்]

தன்னிடத்தில் பெற்ற வரத்தினாலேயே அரக்கர் ஆற்றலுற்றிருக்கின்றாரா ராதலால், கொடுப்பது ஒருகையாலும் கொல்வது மறுகையாலும் செய்வது தகாதென நினைத்த சிவபிரான் "நம் இனி அடுவது இல்" என மறுத்தனரேயன்றி, முப்புரம் எரித்த கண் அவிந்ததா லன்று. அதுவன்றியும், "படுபொருள் உணர்ந்த பரமன்" என்றதும் பிருகு முனிவரிட்ட சாபத்தின்படி திருமால் மனிதனாக அவதாரம் செய்யவேண்டியிருந்ததை நினைத்தேபோலும். அதன்மேல்,

கறைமிடற் றிறைவனுங் கடவு ளோர்களும்
மறைமுதற் கிழவனை வந்து நண்ணலும்
முறைமையிற் கடன்முறை முற்றி முண்டகத்
திறைவனு மவரொடு மினிதி னேகினான்.

[விஷம்தங்கிய கழுத்துடைய சிவபிரானும் தேவர்களும் வேதத்தை ஓதியளித்த பிரமனிடம் போய்ச் சேரவும், தாமரையை ஆசனமாகவுடைய அக்கடவுளும் வந்தவர்களுக்கு ஏற்ற உபசரணைகளைச்செய்து அவர்களோடு புறப்பட்டான்]

தேவர்களுக்கு ஓர் ஆலோசனை மண்டபம் இருந்திருத்தல்வேண்டும். அது மேருமலையின் சிகரத்தில் இரத்தினங்களால் அமைக்கப் பெற்றுளது. சிவனும் நான்முகனும் அமரர்களோடுகூட அங்குச் சென்றனர். அச்சபைக்குத் தலைவராய் நான்முகக்கடவுளை அமைத்துத் தேவர்தம்தலைவனான இந்திரன் தங்கள்குறைகளைக் கூறி முறையிடுவதைப் பின்னிரண்டு பாசுரங்கள் பேசுகின்றன.

வடவரைக் குடுமியி னடுவண் மாசறு
சுடர்மணி மண்டபந் துன்னி நான்முகக்
கடவுளை அடிதொழு தமரர் கண்டகர்
இடிநிகர் வினையம தியம்பி னானரோ

பாகசா தனன்றனைப் பாசத் தார்த்தடல்
மேகநா தன்புகுந் திலங்கை மேயநாள்
போகமா மலருறை புனிதன் மீட்டமை
தோகைபா கற்குறச் சொல்லி னானரோ.

[மேருமலையின் சிகரத்தின் நடுவே இருக்கின்ற மாசற்ற ஒளிபொருந்திய இரத்தின மண்டபத்தையடைந்து இந்திரன், நான்முகக் கடவுளை வணங்கித் தேவர்களுக்கு முன்போல் துன்பம் செய்கின்ற அரக்கர்களது இடியை ஒத்த செய்கைகளைச் சொல்லிப் பிறகு உமையைப் பங்காகஉடைய சிவபிரானை நோக்கி, இந்திரஜித்துத் தன்னைக் கயிற்றினால் கட்டி இலங்கையில் வைத்தபோது தாமரை உறையும் பிரமன் தன்னை மீட்டியதை நன்றாகச் சொன்னான்]

இவ்விரு செய்யுள்களுக்கும் பொதுவாய எழுவாய், பாகசாதனன் (இந்திரன்).மண்டபம் அடைந்த தேவர்கள் பிரம்மாவிற்கு அக்கிராசனாதிபதி ஸ்தானம் கொடுத்து இந்திரன் மூலமாய்த் தாம் படும் துன்பத்தைத் தெரிவித்துக் கொண்டனர். இனி, இந்திரன் மேகநாதனால் தனக்கே உற்ற தோல்வியைச் சிவனுக்குச் சொல்வான். அந்நாள் இவனை மீட்டது பிரமனேயாதலால் அவன் பாலதைக் கூறல் மிகையாம்.

சிவபிரானைப் போன்றே விரிஞ்சனும் அவ்வரக்கருக்கு வரங்கள் ஈந்திருந்ததால், இந்திரன் உரைத்தன யாவும் கேட்ட அவ்விருவரும்,

இருபது கரந்தலை யீரைந் தென்னுமத்
திருவிலி வலிக்கொரு செயலின் றெங்களால்

[இருபது கைகளும் பத்துத்தலைகளும் படைத்தவனாயினும் மெய்ஞ்ஞானச் செல்வமில்லாத அந்தஇராவணனது பலத்தினின்றும் உங்களைக் காக்க எம்மால் ஆவது ஒன்றுமில்லை]

என இயம்பி விடவே, தேவர்கள், ஆயின்

கருமுகி லெனவளர் கருணை யங்கடல்
பொருதிடர் தணிக்கி னுண்டெனும் புணர்ப்பினர்

[கரியமேகம்போல் படுதிருக்கின்ற கருணைக் கடலாகிய நெடுமால் இவ்வரக்கரை வென்று தம் துன்பத்தை நீக்கினாற்றான் இனித் தமக்கு ஒரு கதியுண்டு என்னும் எண்ணத்தினர்]

ஆகி,

திரைகெழு பயோததி துயிலுந் தெய்வவான்
மரகத மலையினை வழுத்தி நெஞ்சினால்
காகம லங்குவித் திருந்த காலையில்
பாகதி யுணர்ந்தவர்க் குதவு பண்ணவன்.

[அலைநிறைந்த பாற்கடலில் துயிலும் தெய்வமாகிய மாகதமலையை மனதால் துதித்துத் தேவர்கள் தம் கைகளைக் குவித்திருக்கவும், பாகதியின் மெய்ந்நிலையை உணர்ந்தவர்களுக்கு வந்துதவும் அக்கடவுள்—]

கருமுகிற் றாமரைக் காடு பூத்துநீ
டிருசுட ரிருபுறத் தேந்தி யேடவிழ்
திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின்மேல்
வருவபோற் கலுழன்மேல் வந்து தோன்றினான்.

[கரியமுகில் ஒன்று, தன்னிடத்திலே தாமரையைக் காடாகப் பூக்கப்பெற்றுச், சந்திர சூரியர்களாகிய இரண்டு சுடர்களையும் இரண்டு பக்கத்திலும் ஏந்திக்கொண்டு, ஒரு செம்பொன் மலைமேல் வந்தால் எவ்வாறு தோன்றுமோ அவ்வாறு கார்மேகம்போன்ற திருமால், நயனம் அதரம் உந்தி கரம் பாதம் இவையெலாம் தாமரைபோல் தன்பால் விளங்கக் குண்டலங்கள் இருபுறத்திலும் ஒளிவீச, திருமகளோடுகூடக் கருடன்மேல் வந்து தோன்றினான்]

இல்பொருள் உவமை யொன்றின் உதவியால் கம்பர் வரைந்த இச்சொற் சித்திரம் சாலச் சிறைப்புடைத்து. இவ்விதம் திருமாலை உருவகஞ் செய்தல் இக்கவிக்கு இயற்கை. வாலியும் பின், "நீலக் கார்முகில் கமலம் பூத்து மண்ணுற்று வரிவில் ஏந்தி வருவதே போல்" மாலைக் கண்ணுற்றான். இதனைத் தழுவி அழகிய மணவாளதாசர், "கரியமால்வரை முளரிக்காடீன்று கிடந்தாங்கு" எனவும், "விண்பூத்த கஞ்சம்போல் ஆயிரம் கண் வளரும் பிரான்" எனவும் வருணிப்பர்.

இன்னவாறு கருணையங்கடல் வந்து கலுழன்மேல் தோன்ற,

எழுந்தனர் கறைமிடற் றிறையுந் தாமரைச்
செழுந்தவி சுகந்தவத் தேவுஞ் சென்றெதிர்
விழுந்தன ரடிமிசை விண்ணு ளோரொடும்
தொழுந்தொறுந் தொழுந்தொ றுங்களி துளங்கு
[வார்.

ஆடினர் பாடின ரங்கு மிங்குமா
ஓடின ருவகையா நறவுண் டோர்கிலார்
வீடின ரரக்கரென் றுவக்கும் விம்மலால்
சூடினர் முறைமுறை துளவத் தாண்மலர்.

தேவர் மூவரில் விஷ்ணுவே உயர்ந்தவர் எனக் கம்பரும் எண்ணினார் என்று வாதிக்க விரும்புவோர்க்கு எளிதில் உதவுகின்ற பாசுரங்கள் இவை இரண்டும். சிவனும் பிரமனும் திருமாலின் தாளில் விழுந்து அதனைத் தம் சிரமேல் எடுத்துச் சூடியதாக இச் செய்யுள் போகின்ற போக்கினால் தோன்றிய போதிலும் அங்கு நடந்த நிகழ்ச்சி அவ்வாறு இல்லாதிருத்தலுங் கூடும். வசிட்டன் இவைகளை இப்பொழுது தன் மனத்தின்கண் விரைவினில் எண்ணுவன இவை யென்பதை மறத்தலாகாது. ஆயின் இச் செய்யுளை "கறைமிடற்றிறையும் தாமரைச் செழுந்தவிசு உகந்த அத்தேவும் எழுந்தனர். எதிர் சென்று அடிமிசை விழுந்தனர்களான விண்ணுளோரொடும் தொழுந்தொறும் தொழுந்தொறும் களிதுளங்குவார்" என அன்வயப்படுத்திக் கொள்வதும் பொருந்தும். ஒரு சபையின்கண் வருமவருக்கு உபசாரமாக எழுந்தவர்களெல்லாம் வருவோர்க்குத் தாழ்ந்தவர் ஆதலே வேண்டும் எனும் நியதியில்லை. திருமால் வரச் சிவனும் பிரமனும் எழுந்தனர். ஆனால் அவர் சென்று அடிமிசை விழுந்திலர். விண்ணுளோர் சென்று விழுந்தனர். தொழுதவர்களும் அவர்களே. அவர்கள் தொழுந்தோறும் இவ்விருவரும் அயல் நின்று, 'நன்று நன்று' எனக் களிப்பினால் அசைந்தனர். இதுவே இயல்வதாம். தொழுகின்றவர்களே அசைவதும் இயற்கையன்று. ஆதலின், அமரர் தொழுவதும் சிவனும் அயனும் அது கண்டு துளங்குவதுமே இன்று வசிட்டனது மனக்கண்களின்முன் தோன்றியிருக்கும். இதனுக்கடுத்த செய்யுள் அமரர்களது செய்கையையே குறிக்கின்றதென்பதற் கையமில்லை. வீடினர் அரக்கர் என்னும் விம்மல், அவர்களுக்கே உரியது. எனினும், விண்ணுளோரொடும், என்பதிலுள்ள 'ஒடு' உருபு நாம் கொண்ட இப்பொருளிற்கு ஒருசிறிது இடையூறாய் இருக்கின்றது என எண்ணவேண்டா. அமரர்க்கும் இவ்விருவர்க்கும் உடன் நிகழ்வது களிப்பு. இவர் செய்கையில் அமரர் தொழுதனர், துளங்கினர். இதற்கிடையே,

பொன்வரை யிழிவதோர் புயலின் பொற்புற
என்னையா ளுடையவன் றோளின் றெம்பிரான்
சென்னிவான் றடவுமண் டபத்துச் சேர்ந்தரி
துன்னுபொற் பீடமேற் பொலிந்து தோன்
[றினான்.

[எம்பிரான், பொன்மலையினின்று இறங்கும் ஒரு மேகத்தைப்போல், என்னை ஆட்கொண்ட கருடனின் தோளினின்று அழகாக இறங்கி, ஆகாயத்தை அளாவிய மண்டபத்தைச்சேர்ந்து ஒரு பொன்னாலாகிய சிங்காதனத்தின்மேல் விளங்கத் தோன்றினான்]

இச்செய்யுளில் கம்பர் தன்னைத் தன்கதையோடு கலந்துகொண்டு, 'என்னையாளுடையவன்' என்றும் பின் 'என்னை ஆளுடைய ஐயன்' என்றும் சொல்வதால் அவர் சிவனினும் விஷ்ணுவின்பால் சிறந்த பக்தியுடையவர் எனத் தெரிகின்றது என்பார் சிலர் இவை இரண்டும் கவியினது கூற்று அல்லவே. வசிட்டன் இதயத்து எண்ணுவன. என், என்னும் தன்மை வசிட்டனைச் சார்கின்றது, கம்பரையல்ல. ஆற்றுப்படலம் இரண்டாவது செய்யுள் நினைவினில் இருப்பவர் இவ்வாறு கருதார்.

திருமால் பீடமிசை அமர்ந்ததும்,

விதியொடு முனிவரும் விண்ணு ளோர்களும்
மதிவளர் சடைமுடி மழுவ லாளனும்
அதிசய முடனுவந் தயலி ருந்துழிக்
கொதிகொள்வே லரக்கர்தங் கொடுமை கூறினார்.

[பிரம்மாவுடன், சந்திரன் வளர்கின்ற சடையையும் மழுவையும் உடைய சிவபிரான், அதிசயமுடன் உவகையோடு அயலே இருக்க, முனிவர்களும் தேவர்களும் திருமாலிடத்தில் கொதிக்கின்ற வேலையுடைய அரக்கர்கள் செய்யும் கொடுமையைக் கூறினார்]

இச்செய்யுளிலும் ஒடு என்னும் உருபால் விதியையும் சிவனையும் மாத்திரம் சேர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். இவ்வாறு இவ்விருவரைச் சேர்த்து முனிவரையும் விண்ணவரையும் பிரிக்காவிடின், எல்லாரும் அயல் இருக்க நேருமேயல்லாது சொல்வதற்கு எவரும் இல்லாமற் போவர். கொடுமையைக் கூறி,

ஐயிரு தலையினோ னனுச ராதியாம்
மெய்வலி யரக்கரால் விண்ணு மண்ணுமே
செய்தவ மிழந்தன திருவி னாயக
உய்திற மில்லையென் றுயிர்ப்பு வீங்கினார்.

[பத்துத்தலை யுடையவனும் அவன் தம்பியர் முதலாயினாரும் ஆகிய சரீரபலம் வாய்ந்த அரக்கர்களால் வானமும் பூமியும் செய்வதற்கொத்த தவங்களெல்லாம் இழந்தன (எனத் தேவரும் முனிவரும் முறையே சொல்லி) லக்ஷ்மிநாயக, இனி எங்களால் பிழைக்க முடியாதென்று பெருமூச்சு விட்டனர்.]

திருமகளைவிட்டுப் பிரிந்தே அந்நெடுமால் தமதிடர் தீர்ப்பதாகும் என்னும் வருமதை உணராராயினும் அவர்களை அறியாமலே 'திருவின் நாயக' என அழைக்கும்படி வாய்ச்சொல் வந்ததாயிற்று அமரர் அது சொல்லி முடித்ததும், சிவனும் பிரமனும் தாமிருக்கும் நிலையைத் தெரிவித்தனர்,

எங்கணீர் வரங்களா லரக்க ரென்றுளோர்
பொங்குமூ வுலகையும் புடைத்த ழித்தனர்
செங்கணா யகவினித் தீர்த்த லில்லையேல்
நுங்குவ ருலகையோர் நொடியி லென்றனர்.

[நாங்கள் தந்துள பெரிய வரங்களால் அரக்கர்கள் மூன்றுலகங்களையும் அடித்தழித்து விட்டனர். செம்கண் நாயக, நீ இனித் தீர்க்காமலிருந்தால் உலகத்தை ஒரு நொடியில் விழுங்கி விடுவர், என்றனர்]

என்றபி னமரர்க ளிறைஞ்சி யேத்தலும்
மன்றலர் துளவினான் வருந்தல் வஞ்சகர்
தந்தலை யறுத்திடர் தணிப்பன் றாரணிக்
கொன்றுநீர் கேண்மென வுரைத்தன் மேயினான்.

வானுளோ ரனைவரும் வான ரங்களாய்க்
கானினும் வரையினுங் கடித டத்தினும்
சேனையோ டவதரித் திடுமின் சென்றென
ஆனன மலர்ந்தன னருளி னாழியான்.

இன்னவாறு விதித்துப் பிறகு தானே வந்து உலகில் தயரதன் மதலையாய் அவதாரஞ் செய்யத் திருவுளங் கொண்டிருப்பதைத் திருமால் கூறுகின்றார்.

T. N. சேஷாசலம்.

கம்பராமாயணம்

பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெறாது போய்விடுவர் ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்பிரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக்களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்பருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யுளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ்வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0

(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,

"கலா நிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைபாக்கம்,

சென்னை.

ஏமாங்கதத்

இளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலினுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமிழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப்பன வெகு சில.

விலை ரூ. 1 0 0

(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,

"கலா நிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைவாக்கம்,

சென்னை.

KAMBAN'S KOSALA

or

A Poet's Plea for Culture

by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being. The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*" 11, Vellala St., Purasawalkum, Madras.

வர்த்தமானம்.

இரவீந்தரர் ஐரோப்பியப் பிரயாணம் :— இரவீந்தரநாதர் இம்மாதம் 27ந் தேதி சென்னையிலிருந்து பிரயாணமானார். இவர் ஏறிய பிரஞ்சுக்கப்பலின் உத்தியோகஸ்தர்கள் இவருக்கு விருந்தளித்தனர். கப்பல் புதுச்சேரியில் தங்கும் என்றும் கவி அரவிந்தரைச் சந்திப்பார் என்றும் தெரிகிறது. ஸ்ரீமான் E. W. அரியம் M. A. கவிவாருடன் போயிருக்கின்றார்.

***

புதுக்கோட்டை மன்னர் மாண்டார் :— புதுக்கோட்டை மன்னர் மேமாதம் 28ந் தேதியன்று இறந்து போனார் என்று பாரிஸ் செய்தி ஒன்று கூறுகிறது. மன்னருக்கு இரண்டுமுறை ஆப்பரேஷன் நடந்ததாம். வைத்தியர்களும் மன்னர் சீக்கிரத்தில் சுகமடைந்து விடுவார் என்று நம்பியிருந்தனர். 28ந் தேதி திடீரென்று தேகஸ்திதியில் மாறுதல் ஏற்பட அன்றே மாண்டுபோனாராம்.

***

திலகர் குமாரர் இறந்து போனார் :— திலகர் பெருமனின் இரண்டாவது குமாரரான ஸ்ரீதர பல்வந்தராவ் திலகர் ரயில்வரும் சமயம் தண்டவாளத்தில் படுத்துக்கொண்டிருந்து உயிர்நீத்தார். இவர் தற்கொலை செய்துகொண்டதின் காரணம் தெரியவில்லை. இவருக்கு இரண்டு குழந்தைகளும், ஒரு இளம் பிராயமுள்ள மனைவியும் இருக்கிறார்கள் என்று தெரிகிறது.

***

பக்ரீத் பண்டிகையும், அதிகாரிகளின் ஏற்பாடும் :— பக்ரீத் பண்டிகைதினம் நெருங்கி வருகிறபடியால் டில்லி அதிகாரிகள் வழக்கம்போல் இவ்வருஷம் கலகம் ஒன்றும் ஏற்படாதவாறு செய்வதற்காகச் சில இந்து முகமதியத் தலைவர்களின்மீது ஜாமின் நடவடிக்கை தொடர்ந்துள்ளார்கள். சர்தார் பஜார் போலீஸ்டேஷன் எல்லைக்குள்ளிருக்கும் 46 முகமதியர்களும், 16 ஹிந்துக்களும் கலசம் நடவாது பார்த்துக்கொள்வதாக 500 ரூபாய்க்கு ஜாமின்பத்திரம் எழுதிக் கொடுத்திருக்கின்றனர்.

***

காஞ்சிபுரம் முனிசிபல் சேர்மன் அறிக்கை :— சென்ற இரண்டு மூன்று வருடங்களாகக் கால மழை சரியாயில்லாமையால், காஞ்சிபுரத்தில் ஜலவசதி குன்றியிருக்கிறது. காஞ்சிபுர வாசிகளே ஜலத்திற்குக் கஷ்டப்பட்டு வருகின்றனர். இம்மாதமுடிவு தொடங்கி ஜூன் மாதம் 10 தேதி வரை நடைபெறும் ஸ்ரீதேவராஜர் பிரம்மோற்சவத்திற்கு இவ்வருஷம் ஜனங்கள் வழக்கம்போல் வருவாராயின், ஜலவசதியில்லாது வருந்த வேண்டிவரும். ஆகலான் இவ்விஷயத்தை முனிசிபாலிட்டியார் தமிழ் நாட்டு மஹாஜனங்களுக்கு முன் எச்சரிக்கையாக அறிவிக்கக் கடமைப் பட்டிருக்கின்றனர்.

***

ஒரு வதந்தி :— ஜெர்மனியின் சக்கரவர்த்தியாயிருந்த கெய்சர் திரும்பவும் ஜெர்மனியின் ஆட்சியை ஏற்க முயன்று வருகிறார் என்னும் வதந்தியை ஒட்டி ஒரு அமெரிக்கப் பத்திரிகையின் பெர்லின் நிருபர் எழுதுவதாவது:-"கெய்சர் மீண்டும் ஜெர்மனிக்குள் திரும்புவதைப் பற்றி அமெரிக்காது ஆமோதிப்பைப் பெறுவதற்காக ஒரு தூதன் அமெரிக்காவிற்குச் செல்வான் என்று தெரிகிறது. ஜெர்மனி ஜனங்களில் பெரும்பாலாயினோர் கெய்சர் ஆட்சி ஏற்க விரும்புவதானால் அவர் ஜெர்மனிக்குள் செல்வதை அமரிக்கர் எதிர்க்கமாட்டார்கள் என்பது அத்தூதனது எண்ணம். ஆனால் அமெரிக்கா இதை ஏற்காது என்பது நிச்சயம்.

***

பர்தோலி சத்தியாக்கிரஹம் :— பர்தோலி சத்தியாக்கிரக சபைக் காரியதரிசி அறிவிப்பதாவது:— அரசாங்க உத்தியோகஸ்தர்கள் செய்யும் ஜப்தி நடவடிக்கைகள் கொடுமையான வழியில் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வீட்டிலும் பட்டாணியர் காவலாய் நிறுத்தப்பட்டுள்ளனர். வீட்டினுள் அகப்பட்டவர் வெளியில் செல்லுதலும் முடியவில்லை. இரவிலும், நடுநிசியிலும் சாமான்கள் தூக்கப்படுகின்றன. சத்தியாக்கிரஹத் தொண்டர்கள், வீட்டிற்குள் அகப்பட்டவர்களுக்கு உணவு தந்தும், ஜலவசதி கொடுத்தும் வருகிறார்கள். அதிகாரிகளின் கூலிகளான பட்டாணியர்களே திருடாதிருக்கத் தொண்டர்கள் காவல்புரிந்துவருகின்றனர். இவ்வளவு துன்பத்தையும் ஏற்று ஜனங்கள் பொறுமையுடனும், தளரா மனதுடனும் இருக்கின்றனர். பர்தோலி வரித் தகவல் விஷயமாய் ஒரு முடிவுசெய்ய ஸர் லலுபாய் சாமல்தாஸ் முன்வந்துள்ளார்.

***

கேரள அரசியல் மஹாநாடு :— நான்காவது கேரள மஹாநாடு, பண்டிதர் ஜிவஹரிலால் நேருவின் தலைமையில் பாயானூர் என்னுமிடத்தில் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்குக்கூடிற்று. தலைவர்முன்னுரையாகக் கூறியது:- "நாம் அரசியலைத் தொழிலாக உடையவரல்லர். நாடு அன்னியரிட மிருப்பதால்தான் நாம் அரசியல் வாதிகளாய் இருந்துவருகிறோம். பூர்ண சுயராஜ்யமோ அல்லது எவரது சம்பந்தமுமில்லாத சுயேச்சையையோ பெறமுயன்று வருகிறோம். நாம்பெற வேண்டுவது என்னவென்பதை முதன்முதலாக முடிவு செய்துகொண்டு ஒருதிட்ட மொன்றை நாம் காண முயல வேண்டும். பிறகு அதைப் பெறுவதற்குச் சரியான வழியும் ஏற்படும். இல்லையேல் நமது முயற்சியெல்லாம் பேய்த்தேர் வேட்டையாகும். மேனாட்டார் முறை நமது இயற்கைக்கும் வாழ்க்கைக்கும் ஏற்றதல்ல."

பின்னர்த் தலைவர் இந்து முஸ்லிம் பிணக்கும், வகுப்பு வேற்றுமைத் தொல்லையும் ஒழியவேண்டு மென்று வற்புறுத்தியும் பர்தோலி சத்தியாக்கிரஹத்தை ஆதரித்தும் பேசினார்.

***

விவாக வயது மசோதா :— இந்தியச் சட்டசபையிலும், இராஜாங்கச் சபையிலும் செய்யப்பட்ட தீர்மானத்தின்படி நியமிக்கப்பட்ட ஆலோசனைக் கமிட்டியார், விவாக வயது மசோதா விஷயமாய் முடிவு செய்த அறிக்கை வருமாறு :—

"பெண்கள் மணத்திற்குரிய வயது 14 என்றும் 18 ஆடவர்க்குரியது என்றும் ஆலோசனைக் கமிட்டியார் முடிவு செய்திருக்கின்றனர்.

"நிர்ணயிக்கப்பட்ட வயது வருமுன் கல்யாணத்தை நடத்துபவர், அதற்குத் துணைநிற்பவர், கலியாணச் சடங்கைச் செய்து வைப்பவர், அத்தகைய கலியாணத்திற்கு அனுமதி கொடுப்பவர், இவர்கள் இம்மசோதாவின்படி குற்றவாளிகள் என்று கமிட்டியார் முடிவு செய்திருக்கின்றனர்.

"காலத்திற்குமுன் கலியாணம் நடப்பின் அதற்குக் கலியாணப்பெண் ஜவாப்தாரியாக மாட்டாளாகையால் அவளுக்குத் தண்டனைகிடையாது. 18 வயதிற்குட்பட்ட மணமகனும் குற்றவாளியாகமாட்டான். 18 வயதிற்கு மேல் 21 வயதிற்குட்பட்ட மணமகனுக்கு அபராதம் மாத்திரம் விதிக்கப்படும். 21 வயதிற்கு மேல்பட்டிருந்தால் அவனுக்கு முழுதண்டனையும் விதிக்கப்படும். அபராதமும் ரூ. 1000க்கு மேலாகாது. தண்டனையும் வெறுங்காவல் தண்டனையாய்த்தா னிருக்கும்.

"இவ்வழக்குக்களை விசாரிக்கப் பிரிசிடென்ஸி மாஜிஸ்டிரேட்டிற்கும், ஜில்லா மாஜிஸ்டிரேட்டிற்கும் அதிகாரம் உண்டு. விவாகம் நடந்த தேதியிலிருந்து ஒருவருஷ காலத்திற்குள் வழக்குத் தொடரப்பட வேண்டும். அக்கால அளவிற்குமேல் வழக்குத் தொடரல் செல்லாது.

"இது இந்தியாவிலுள்ள எல்லாச் சமூகத்தினர்களுக்கும் பொதுவானது. இது சட்டம் செய்யப்பட்டு 1930-ம் வருஷம் முதலிலிருந்தே அமுல் செய்யப்பட வேண்டும்"

இவையே செலக்டு கமிட்டியின் அறிக்கையின் முக்கிய அம்சங்கள். அரசாங்கத்தார் பொதுஜன அபிப்பிராயத்திற்காக இந்த அறிக்கையைப் பிரசுரம் செய்திருக்கிறார்கள்.

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "**KALANILAYAM**"
11, Vellala Street, Purasawalkum, Madras.

Dr. Orison Swett Marden's World Famous Inspirational Books

(3) TEACH AND TRAIN YOU

To discover what career you are best fitted for; To succeed in your chosen calling; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.

GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers—Diverted by salary—Mere money-making is not success.

RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where you are—The might of little things—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An over mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty

PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence—Health-building during sleep—Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine

EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease—Killing emotions—Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influence—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.

THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master—Trifles—Courage—Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire!—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement—The crime of the "Blues" Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

Special Indian Edition Rupee 1-8-0 each

V. KALYANARAM IYER & Co.,

BOOK-SELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumarian, B.A., B.L. (Editor)